Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-02 | 18-07-2005 | திங்கட்கிழமை | ஓசை-150

18 JUL 2005


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12149)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில்

# உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புடன்

# தமிழரின் நம்பிக்கை சிதைந்துவிட்டது!

## சர்வதேச சமூகமே நேரடியாக உதவவேண்டுமென சு.ப.தமிழ்ச்செல்வன் கோரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

எங்கள் மக்களுக்கான அவசர மனிதாபிமான தேவைகள் எதனையும் சிறிலங்கா அரசிடம் இணக்கப்பாட்டை ஏற்படுத்திப்பெறலாம் என்ற நம்பிக்கை பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புடன் முற்றாகத் தகர்ந்துவிட்டது. எனவே மக்களின் அடிப்படை-அவசர மனிதாபிமான உதவியானாலும் சரி, பிற உதவிகளானாலும் சரி நேரடியாக மேற்கொள்கின்ற தீர்க்கமான நிலைக்கு சர்வதேச சமூகம் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்று கிளிநொச்சி சமாதான செயலகத்தில் சந்தித்துப்பேச்சு நடத்திய பின்னர் பிற்பகல் 3.00 மணிக்கு இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்:

**நீண்ட நேரம் நடைபெற்ற இன்றைய சந்திப்பில் எடுக்கப்பட்ட முடிவுகள் எவை?**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாதாந்தம் நாங்கள் சந்திப்பை நடத்துவது வழமை. அந்த வகையில் தான் இன்றைய சந்திப்பும் அமைந்தது. எனினும்

(2ஆம்பக்கம் பார்க்க)



## பொதுக்கட்டமைப்பு செயலிழந்தது அதுபற்றிப் பேசி பயனெதுவுமில்லை

### - தமிழ்க்கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன்

(அலுவலகசெய்தியாளர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசர மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு செயலிழந்து போய்விட்டது. அதனைப் பற்றி பேசுவதில் எந்தப்பயனும் இல்லை. இனி நிலைமைகளை சர்வதேச நாடுகளுக்கும். மக்களுக்கும் தெளிவுபடுத்துவதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பணிஇவ்வாறு தெரிவித்துள்ளார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து பேச்சுநடத்திய பின்னர் பத்திரிகையாளர்களிடம் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

(12ஆம்பக்கம் பார்க்க)

## மன்னாரில் வெடிபொருட்களுடன் ஏழு பேர் கைதாகி தடுத்துவைப்பு

மன்னாரில் நேற்று மாலை அதி சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இரண்டு படகுகளில் கொண்டுவரப்பட்டு மன்னார் கடற்கரையில் இறக்கிக் கொண்டிருக்கையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இவற்றுடன் ஏழு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எட்டு கிலோகிராம் எடை கொண்ட 16 கிளேமோர் குண்டுகள், இரண்டு டெட்டனேட்டர் வயர்கள் மற்றும் ஒரு தூரநோக்கி என்பனவும் இந்த வெடி பொருட்கள் கொண்டுவரப்பட்ட இரண்டு, படகுகளும் ஒரு முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட ஏழு பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை அநுராதபுர சிறைச்சாலையில் விளக்க

(12ஆம்பக்கம் பார்க்க)

## உந்துருளி மரத்துடன் மோதி இளைஞர் தலைசிதறிப் பலி

### -காரை நகரில் கோரச்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

உந்துருளி மரத்துடன் மோதியதில் அதனை ஓட்டி வந்த இளைஞர் தலைசிதறிப் பலியானார்.இக்கோரச் சம்பவம் நேற்று மாலை 2.30 மணியளவில் காரைநகர் தெருப்பிள்ளையார் கோவிலடியில் நடந்துள்ளது.

இதில் காரைநகர் புதுவீதியைச் சேர்ந்த தர்மையா-தேவகுமார் (வயது24) என்பவரே பலியானவராவார்.

பிரஸ்தாப நபர் தனது

(12ஆம்பக்கம் பார்க்க)

## மீனவர்களுக்கு வந்த படகுகளை இராணுவம் புலிகளுக்கானதெனக் கூறி அடாவடி!

### - சுப்பர் மடத்தில் மக்கள் எதிர்ப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் கியூ மெடிக்கா நிறுவனத்தினரால் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியான மீனவக் குடும்பங்களுக்கு வழங்கவென கொண்டு வரப்பட்ட படகுகளில் மூன்று படகுகள் விடுதலைப்புலிகளுக்கு வந்துள்ளதென இராணுவத்தினர் கூறியுள்ளனர். படகுகளை இராணுவத்தினர் பார்வையிடச்சென்றபோதே சுப்பர் மட

(12ஆம்பக்கம் பார்க்க)

## சுப்பர்மடம் பகுதி விபத்தில் வயோதிபர் ஒருவர் பலி!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் உந்துருளியில் மீன்பிடிப் படகின் வெளியிணைப்பு இயந்திரம் கொண்டு செல்கையில், எதிரே வந்த வயோதிபர் இயந்திர பப்ளர் வெட்டிப் பலியாகியுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் சுப்பர்மடம் பகுதியில் நிகழ்ந்துள்ளது. மீன்பிடிப் படகின் வெளியிணைப்பு இயந்திரத்தை பழுது பார்க்கவென பருத்தித் துறை பகுதிக்கு உந்து

(12ஆம்பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கு நீதிமன்றத்தடை கண்காணிப்புக்குழு கவலைதெரிவிப்பு

பொதுக்கட்டமைப்புக்கு சிறிலங்கா உயர் நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடை குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கவலை தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலட்ஸ்டொபிட்டிர் இது குறித்து கூறுகையில்.

பொதுக்கட்டமைப்பு கையெழுத்திட்ட போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையேயான நம்பிக்கையை வளர்த்தெடுக்க இது உதவும் என்று கூறியிருந்தோம். இந்தத் தடை இரு தரப்பினரிடையே எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்றார் அவர்.

இந் நிலையில் தடை குறித்து கருத்துத் தெரிவித்த சிறிலங்கா சமாதான செயலகத்தின் ஒருங்கிணைப்பாளர் சர்மினி குறிப்பிட்ட சில பிரிவுகளுக்குத்தான் தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. இது பொதுக்கட்டமைப்பை முழுமையாக பாதிக்காது. அரச தரப்பிலான விளக்கத்தை யூலை 29 ஆம் திகதியன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளோம் என்றார்.

## அரசியல் பணிப்போராளி மீது முகமாலையில் இராணுவம் மிரட்டல்

### -கண்காணிப்புக்குழுவிடம் புகார்

யாழ்.அரசியல்துறைச் செயலகத்தில் பணியாற்றும் விடுதலைப்புலிகள் போராளி கனியன் முகமாலையிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியிலுள்ள போராளிகளைப் பதிவு செய்யும் பகுதியில்வைத்து இராணுவத்தினரால் மிரட்டப்பட்டுள்ளார்.

இப்போராளி வழமையாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியுடன் பயணம் செய்பவராவார். சம்பவவேளை தனியாகச் சென்ற இவரை அது குறித்து விசாரித்த இராணுவ அதிகாரி ஒருவர் இளம்பரிதியை இலக்குவைத்து மேற்கொள்ளப்படவுள்ள கிளைமோர் தாக்குதலில் இவரை சிக்கிவிடாது எதிர்காலத்தில் கவனமாக இருக்கும்படியும் எச்சரித் துள்ளார். இது குறித்து யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி யாழ்.மாவட்ட கண்காணிப்புக்குழுவினிடம் முறையிட்டதுடன், ஆயுதமின்றி சென்ற விடுதலைப்புலி உறுப்பினர் மீதுஇராணு வத்தினர் மேற்கொண்ட மிரட்டல் மிகமோசமான யுத்த நிறுத்த மீறல் எனத் தெரிவித்துள்ளார்.

## உயர்...

இன்றைய கள நிலைமைகளின் அடிப்படையில் இன்றைய சந்திப்பு முக்கியம் பெறுகின்றது. இதனால் தமிழ் மக்கள் எத்தகைய நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றி சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச்சொல்கின்ற வேலைத்திட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிரமாகச் செயற்பட இருப்பதாக இன்று எங்களுக்கு உறுதியளித்திருக்கிறார்கள்.

அந்த வகையில் இனி ஏற்படப்போகின்ற நிலைமைகள் பற்றி சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்குவதும் எங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்துவதுமான பணியில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தாமும் இணைந்து பணியாற்றுவதாக முடிவெடுத்திருக்கிறார்கள். இதனால் இன்றைய சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

**அரசுக்கும் -புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பின் சில சரத்துக்கள் உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி விடுதலைப்புலிகளின் உணர்வலைகள் எப்படியிருக்கிறது?**

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் இது துரதிஷ்டவசமானது. ஏனெனில் கடந்த காலங்களைப் போலவே தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் சென்றடையக்கூடாது,.-அவர்களுக்கான தீர்வு முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கக்கூடாது. என்பதிலுமே சிங்களப் பேரினவாதத் தலைமைகள் ஏதோ ஒரு வழிமுறையைக் கையாண்டிருக்கிறார்கள்.

சிங்கள-பௌத்த இனவாதிகளை கொண்டோ அல்லது அரசியல் கட்சிகள் பௌத்த மதபீடங்கள் என்பவற்றைக் கொண்டோ அவற்றாலும் நிறைவடையாவிட்டால் அங்கிருக்கின்ற நீதி-சட்டத் துறையைக் கொண்டோ மக்களுக்கான அநீதிகளை நியாயப்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். முன்னெடுக்கப்பட்ட தீர்வு முயற்சிகளை சீர்குலைத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தான் இப்பொழுதும் இந்த நிலை உருவாகியிருக்கிறது சுனாமி பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு மனிதாபிமான நெருக்கடிக்கு, அதாவது எங்கள் தேசத்தில் நிகழ்ந்த பேரவலத்தில் இருந்து மக்களை மீட்டு அவர்களுக்கான நிவாரண மீள்கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பையே இன்று ஆட்டம் காணச்செய்திருக்கிறார்கள். அதை சீர்குலைத்து முடிவிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த இடத்தில் சிறிலங்கா நீதித்துறை இத்தகைய முடிவை எடுத்ததை வைத்து நாங்கள் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் இவை எப்போதும் தமிழ் மக்களுக்கு நீதிவழங்குவதில் செம்மையாக செயற்பட்டதில்லை. விரோதமாகத் தான் கடந்த காலங்களில் செயற்பட்டன. எங்கள் மக்கள் சிறிலங்கா சிறைகளில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டபோது அதனுடன் தொடர்பு பட்டவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்பட்ட போது அவர்கள் குற்றவாளிகள் இல்லையென விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். வரலாற்று ரீதியாக எடுத்துப்பார்த்தால் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்கள் கூட இங்கு உருவாக்கப்பட்டு எங்கள் மக்கள் பெரும் அநீதிக்குட்படுத்தப்பட்டனர்.

இந்த வகையில் நாம் எதிர்பார்த்த தொன்றாகவே தான் இது உள்ளது.

**இந்தநிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்வாழ்வில் நீங்கள் எத்தகைய போக்கை மேற்கொள்ள இருக்கிறீர்கள்?**

இந்தப் பொதுக்கட்டமைப்பு நீண்டகால இழுத்தடிப்புக்குப் பின்னர் சனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்படப்பட்டது. உண்மையிலேயே விருப்பமின்மையும், இழுத்தடிப்பும் இதில் ஏற்கனவே தெரிந்த ஒன்று.

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்குப் பணிந்து அவர்கள் கைச்சாத்திட்டாலும் இதை நடைமுறைக்குக் கொண்டு வருகிற விடயத்தில் மேலும் காலதாமதத்தையும் இழுத்தடிப்பையும் நிறைவேற்றுகின்ற போக்கைத் தான் அவர்கள் அண்மைக்காலத்தில் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு மாதம் ஆகப்போகிறது. இந்தக் கட்டமைப்பை உருவாக்கி உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரும்படி இதில் கைச்சாத்திட்ட அன்றே நோர்வேத் தரப்புக்கு வலியுறுத்தியிருந்தோம். எனினும் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு இப்பொழுது அந்தக் குழுவிற்கான பெயர்களை நியமனம் செய்து அறிவித்திருந்தனர். அதுவும் உயர்நீதிமன்ற தீர்ப்பு வருவதற்கு முதல் நாள். ஆகவே இது திட்டமிட்ட ரீதியில் பொதுக்கட்டமைப்பை நடைமுறைக்குக் கொண்டுவராமல் தடுக்கின்ற நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற நாடகமாகத் தான் இதைப் பார்க்கின்றோம். இந்தநிலையில் பொதுக்கட்டமைப்பைப் பற்றி நாம் மேலும் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் சிங்களத்தரப்பு இணக்கப்பாடு தெரிவித்த அல்லது வாக்குறுதி அளித்த எவையும் கடந்த மூன்றரை வருடங்களில் நடக்கவில்லை. அந்த வகையில் மக்கள் முழுமையான ஏமாற்றம் அடைந்திருக்கின்றார்கள். ஆகவே எங்கள் மக்களுக்கான இந்த மனிதாபிமான உதவிகள் என்பது இலங்கை அரசுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புடன் முற்றாகத் தகர்ந்துவிட்டது. நாங்கள் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம். எங்கள் மக்களுக்குத் தேவையான அவசர மனிதாபிமான தேவைகளானாலும் சரி, உடனடித்தேவைகள் ஆனாலும் சரி அனைத்து உதவிகளையும் நேரடியாகச் செய்கின்ற தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலைக்கு சர்வதேச சமூகம் தள்ளப்பட்டுள்ளது. அதனை எடுத்து விளக்குகின்ற பணியை நாங்கள்அனைவரும் சேர்ந்து எதிர்காலத்தில் மேற்கொள்ள இருக்கிறோம்.

**போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் கிழக்கு நிலைமைகள் எப்படியிருக்கின்றன.?**

உங்கள் அனைவருக்கும் தெரியும் திருமலை மாவட்டத்தில் எங்கள் போராளிகளும் பொதுமக்களும் இறுதியாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். முற்றுமுழுதாக இராணுவத்தினரினதும், இராணுவப்புலனாய்வுப்பிரிவினரதும் பாதுகாப்புக்குள் உள்ள பிரதேசத்தில் தான் இந்த வெறியாட்டம் நடைபெற்றிருக்கிறது.

அந்த வகையில் விடுதலைப் புலிகளை ஏதாவதொரு வகையில் சீண்டி ஒரு யுத்தத்தைத் தொடங்குவதற்கான போக்கை சிங்களப் படைத்தரப்பு தீவிரமாக செயற்படுத்தி வருகிறது. அதுவும் குறிப்பாக தென்தமிழீழத்தில் தான் இதனைத் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் எங்கள் போராளிகளுக்கான அச்சுறுத்தல் தீவிரமடைந்திருக்கிறது.

ஒப்பந்த விதிமுறைப்படி நிராயுதபாணிகளாகவே இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களுக்குள் எங்கள் போராளிகள் அரசியல் பணிகளை முன்னெடுக்க வேண்டியவர்களாகவுள்ளனர். அந்த வகையில் அவர்கள் செயற்பட்டுக்கொண்டிருந்த சூழலில் தான் இப்படியான கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எங்கள் போராளிகளின் பாதுகாப்புக் கருதி எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் கொண்டு வர வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. அதனடிப்படையில் தான் கிழக்கு மாகாணத்தில் எங்கள் செயற்பாடுகள் நகர்த்தப்பட்டிருக்கின்றது. அங்கு படைத்தரப்பு எம் மீதான நிழல் யுத்தத்தைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது என்பதை அண்மைக் காலமாக எம்மால் அவதானிக்க முடிகிறது.

**போராளிகளின் பாதுகாப்பான பயண ஒழுங்கு பற்றிய முடிவுக்காக அரசுக்கு வழங்கிய பதின்நான்கு நாட்கள் காலக்கெடு முடிவடைந்து விட்டது. அடுத்த கட்ட நடவடிக்கை எவ்வாறு அமையப் போகின்றது?**

நாங்கள் ஏற்கனவே கடிதம் மூலமும் நேரடியான உரையாடல் மூலமும் கண்காணிப்புக் குழுவுக்கும் அனுசரணையாளர்களுக்கும் விளக்கியிருக்கின்றோம்.

எங்களது போராளிகளின் பயண நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளப்படாது விட்டால் வழமை போலவே எங்கள் போராளிகளின் பயண ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படும். இதனை சிறிலங்காப் படைகள் தடுக்க முற்பட்டால் நாங்கள் பதில் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். இதனை ஏற்கனவே நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இரண்டு வாரகால அவகாசம் நிறைவடைந்த நிலையிலும், எங்கள் நிலைப்பாட்டை அவர்களுக்கு மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

ஆகவே இனிவரும் காலங்களில் எமது வழமையான நடைமுறைகள் பேணப்படும். இதை சிங்களப் படைகள் குழப்ப முற்பட்டால் யுத்த நிறுத்த சூழலுக்கு நிச்சயம் நெருக்கடி ஏற்படும் என்றுதான் நாங்கள் நினைக்கின்றோம்.

**அந்த நடவடிக்கையை நீங்கள் எப்போது ஆரம்பிக்கப் போகின்றீர்கள்?**

எங்களது பயண ஒழுங்குகள் தேவைக்கேற்றவகையில் எங்களால் ஒழுங்குபடுத்தப்படும். எங்கள் பாதுகாப்போடு நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவது எப்போதும் பகிரங்கப்படுத்தப்பட்டு நடைபெறுவதில்லை. அது இயல்பாகவே நடைபெறும். அதனை சிங்களப் படைகள் தடுக்கின்ற பொழுது அல்லது நெருக்கடி நிலை வெளிப்படுகின்ற பொழுது தான் நீங்களும் அந்தப் பயணத்தை அறிய முடியும்.

**போக்குவரத்து நடைமுறைகள் தவிர போர்நிறுத்த உடன்பாடு தொடர்பில் ஏனைய விடயங்கள் தொடர்பாக எத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?**

போர்நிறுத்த உடன்பாடும் அமைதி முயற்சிகளையும் பொறுத்தவரையில் குழப்பிக்கொண்டு முறித்துச்செல்ல எங்கள் தலைமை எப்போதும் விரும்பியதில்லை. நாங்கள் எங்கள் மக்களது அபிலாசை என்றவகையில் அமைதிவழியில்,சமாதான வழியில் முயன்று பார்த்திருக்கிறோம். இந்த மூன்றரை வருட காலமாக இதற்காக நாம் தீவிரமாக முயற்சி எடுத்திருக்கிறோம். எங்களது தலைவர் விட்டுக்கொடுப்புக்களை செய்து பொறுமைகாத்து பெரும் அர்ப்பணிப்புடன் தான் இந்த மூன்றரை வருடகாலத்தையும் கடந்திருக்கிறோம். இந்தக்காலப்பகுதியில் நாங்கள் பெருமளவு போராளிகளை, பொறுப்பாளர்களை, தளபதிகளை இழந்த நிலையிலும் நாங்கள் நீண்ட பொறுமையைக் காத்திருக்கிறோம். ஆனாலும் இப்பொழுது நிலைமைகள் மிகவும் மோசமாக்கப்பட்டுள்ளது. எங்கள் போராளிகளின் நடமாட்டம் முடக்கப்படும் சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. நிழல் யுத்தத்தை இன்னும் தீவிரப்படுத்தி இருக்கிறார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அரசியல் பணி செய்கின்றபோராளிகள் இராணுவத்தின் துணையுடன் பகிரங்கமாகச் சுட்டுக்கொலை செய்யப்படுகின்றனர். இப்படியான நிலமைகளை இனியும் நாம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. இதை நாம் கண்காணிப்புக்குழுவிற்கும், சர்வதேச சமூகத்திற்கும், அனுசரணையாளர்களுக்கும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். இனி நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளை நகர்த்தவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆகவே அந்தவகையில் இனிவரும் சூழல் எப்படி அமையப் போகிறது - அமையவேண்டும் என்பதை சிங்கள அரசும், அதன் படைகளும் தான் தீமானிக்கவேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் நாம் வலிந்து யுத்தத்தை தொடங்க விரும்பவில்லை. ஆனால் சிங்களப் படைகள் யுத்த சூழலை உருவாக்குவதற்கு வலிந்து செயற்படுகின்றபொழுது நாங்கள் அதை எதிர்கொள்ள வேண்டும். அந்த நிர்ப்பந்தம் எமக்கு உண்டு. அந்தச் சூழல் தவிர்க்க முடியாதென்றுதான் நான் நினைக்கிறேன்.

**சமாதான முயற்சிகள் ஒருமுடிவுக்கு வந்துவிட்டன எனக்கொள்ள முடியுமா?**

இப்போதுள்ள சூழலைப் பொறுத்த வரையில் அந்த நிலையை நோக்கி மிக வேகமாக வந்து கொண்டிருப்பதாக எங்களால் உணர முடிகிறது.

**நிழல் யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறுகிறீர்கள் எவ்வளவு காலம் பொறுமையாக இருக்கப்போகிறீர்கள்?**

எங்களைப்பொறுத்தவரையில் எங்கள் தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டை ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம். சிங்களப் படைகள் நிலைமைகளை குழப்பி எங்கள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டு நிலமைகளை சிக்கலாக்கும் பொழுது அதற்கான மாற்று நடவடிக்கைகளை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவோம். இப்படி எடுக்கப்படுகின்ற சூழலில் நீங்கள் கேட்கின்ற காலம் முடிவுக்கு வரும்.

**தற்போதுள்ள சூழலில் வவுனியா மாவட்டத்தில் கண்காணிப்புக்குழு ஊடாக படைத்தரப்பு புலிகளுடன் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது எந்தளவில் சாத்தியப்பாடானது?**

எங்களைப் பொறுத்தவரையில் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற மாவட்டங்கள் அங்குள்ள சூழ்நிலைகள் கருதியும் பாதுகாப்பைக்கருதியும் போராளிகளை பாதுகாப்பான பகுதிக்கு நகர்த்தியிருக்கிறோம். இந்த மாவட்டங்களில் பெருமளவான குழப்பங்கள் இல்லாத நிலையில் எங்கள் அரசியல் பணிதொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப்பகுதியில் அப்படியான குழப்பத்தை அவர்கள் தீவிரப்படுத்துவார்களேயானால் நாங்கள் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிவரும். இப்பொழுதுள்ள நிலையில் அரசியல் பணிகளை மேற்கொள்கின்ற பொழுது கண்காணிப்புக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.

**நெருக்கடி நிலையை தணிப்பதற்கு நோர்வே ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா?**

நோர்வேத்தரப்பு முயல்வதாகவே தெரிகிறது. ஆனால் அவர்களின் முயற்சிகள் எவ்வளவு வெற்றியளிக்கும்? என்பதுதான் கேள்விக்குறியாக உள்ளது.

ஏனெனில் கண்காணிப்புக் குழுவையோ அல்லது நோர்வே அனுசரணையாளர்களின் முயற்சிகளை அவர்கள் ஏற்பதாகவோ அல்லது அனுசரித்துப் போவதாகவோ தெரியவில்லை. இன்று வந்த செய்திகளின்படி போராளிகள் எங்களது விடுதலை அமைப்பின் அடையாளப்படுத்தலுடன் தான் நடமாடலாம் என்பது தான் ஒப்பந்த விதிமுறையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. ஆனால் அவர்கள் இப்பொழுது சிறிலங்காவின் தேசிய அடையாள அட்டையை கேட்கிறார்கள். இப்படியான நிலை சில இடங்களில் ஏற்பட்டுள்ளது. இந்தச் செயலை கண்காணிப்புக்குழுவோ பாரிய யுத்தநிறுத்தமீறலாக அறிவித்துள்ளது. இப்படியாக எல்லாவிடயத்திலுமே போராளிகளை சீண்டி ஒரு கொலை வெறியாட்டத்தை கட்டவிழ்த்துவிட்டு நிலைமைகளை மோசமாக்கின்ற போக்கைத்தான் சிறிலங்காப் படைத்தரப்பு மேற்கொண்டுவருகிறது. இது அனைவரும் அறிந்த விடயம்.

**கிழக்கில் அரசியல் பணிப் போராளிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் திரும்பும்போது அரசுக்கு ஏதாவது நிபந்தனைகளை விதிப்பார்களா?**

அரசாங்கத்திக்கு நிபந்தனையல்ல ஏற்கனவே இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருதரப்பும் உடன்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் இரண்டுதரப்புக்கும் அந்தக் கடப்பாடு இருக்கின்றது. அதனை அனுசரித்துப் போகுமாறு தான் நாங்கள் வலியுறுத்துகிறோமே தவிர எந்த நிபந்தனைகளையும் வைக்கவில்லை.

**திருமலையில் இராணுவம் மீதான தாக்குதல்களை விடுதலைப்புலிகள் தான் மேற்கொள்கிறார்கள் என அரசதரப்பில் கூறப்படுகிறது.?**

இராணுவத்தின் மீதான தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் விடுதலைப்புலிகள் என்பதை நிரூபிப்பதற்கு அவர்களிடம் எந்த ஆதாரங்களும் இல்லை. தற்போது படைத்தரப்பு மீது தாக்குதல்கள் நடைபெறுகின்ற வேளையில் எங்கள் போராளிகள், பொறுப்பாளர்கள் எவரும் படைத்தரப்பு கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கவில்லை.

அவர்கள் அனைவரும் எங்களது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் தான் இருந்தார்கள். இந்த நிலையில் அவர்கள் வேண்டுமென்றே இந்த நிலையை உருவாக்கி விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டுகிறார்கள் என்றே நாம் பார்க்கின்றோம்.

எங்கள் போராளிகளை படையினரின் இராணுவ முகாம்களுக்கு அருகிலே படையினரின் பாதுகாப்புடன் வந்து சுட்டுவிட்டு தப்பிப் போகிறார்கள். அவ்வாறு சுட்டுவிட்டு தப்பிச்செல்பவர்களை பொலிசார் மறித்து சோதனை செய்து விட்டு அவர்களை மறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் இதனை அந்தப்பகுதி மக்களே உங்களுக்கு சொல்வார்கள்.

**எந்த வேளையிலும் யுத்தம் வெடிக்கலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது?**

மக்களின் அச்சம் தவறானதல்ல அவர்கள் சரியாக ஊகிக்கிறார்கள் என்று தான் நான் நினைக்கிறேன்.

இன்று சிறிலங்காப்படைத் தரப்பால் ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்கடி நிலையை மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் கொந்தளிப்பான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் அவர்கள் சிந்திப்பது நியாயமானது.

**எவ்வளவு காலத்திற்குள் யுத்தம் வரலாம் என்று காலக்கெடு ஏதாவது உள்ளதா?**


நாங்கள் காலக்கெடு விதித்திருப்பதில்லை. படைத்தரப்பும், இலங்கை அரசும் நிலைமைகளை மோசமாக்குவதற்கான சூழ்நிலையை அவர்கள் விரைந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

**அடுத்துவரும் காலங்களில் விடுதலைப்புலிகள் ஆயுதபாணிகளாகத் தான் பிரயாணம் செய்வார்களா?**

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை ஒப்பந்த விதிமுறைப் படிபயணிப்பதாக இருந்தால் படைதரப்பு கண்காணிப்புக்குழுவின் அனுசரணையுடன் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இந்த நிலைமை சீர்குலைகின்ற பொழுது விடுதலைப் புலிகள் தமது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்தியபடி தமது பயணத்தை தொடர்வார்கள் எனவும் தெரிவித்தார்.

(லோ,தீ)

யாழ்ப்பாணம்




நேற்று பாக்தாத்தில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பலியானவரின் உறவினர்கள் சம்பவ இடத்தில் கதறியழுகின்றனர்.

## மரக்கறிச் சந்தையில் தற்கொலைத் தாக்குதல் ஈராக்கில் 60 பேர் பலி; 100 பேர் காயம்

ஈராக்கின் பாக்தாத் நகரை அடுத்துள்ள முகாபாபீ நகரில் உள்ள காய்கறிச் சந்தையில் தீவிரவாதிகள் நடாத்திய தற்கொலைத் தாக்குதலில் 60 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். 100க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

குண்டு வெடித்து இடத்துக்கு அருகே எண்ணை ஏற்றிய ஒரு பாரவூர்தியும் தீப்பிடித்து பயங்கரமாக வெடித்துச் சிதறியது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஈராக்கில் 16 வெடி குண்டுத் தாக்குதல்கள் நடந்துள்ளன. இத் தாக்குதல்களில் 100 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.




ஈராக் கிர்குக் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் அருகே இரண்டு தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதலில் 28 பேர் பலியாகினர். 100 பேர் காயமடைந்தனர். இதில் தீப்பிடித்த காரை தீயணைப்புப் படை வீரர் ஒருவர் அணைக்கிறார்.

# தீவிரவாத முகாம்களை மூடுங்கள் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியில் ஊடுருவலைத் தடுத்து நிறுத்துங்கள். பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களை ஒட்டு மொத்தமாக மூடுவதற்கு கடும் நடவடிக்கை எடுங்கள் என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பிடம் அமெரிக்கா எச்சரித்துள்ளது.**

இது குறித்து அமெரிக்க அதிகாரிகள் வோஷிங்டனில் கூறுகையில்; காஷ்மீர் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது. காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதியில் ஊடுருவலைத் தடுத்து நிறுத்த வேண்டும். பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத முகாம்களை மூட வேண்டும் என்று பாகிஸ்தான் அரசை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றோம். பாகிஸ்தான் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.



அண்மையில் அமெரிக்க கரையை டெனிஸ் சூறாவளி தாக்கிய போது பாதிப்படைந்த அமெரிக்கா எண்ணெய் அகழ்வு மேடை ஒன்று.

## இஸ்ரேல் இராணுவம் ரொக்கெட் தாக்குதல்

காசா பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி உள்ளதாக கருதப்படும் இரண்டு இடங்கள் மீது இஸ்ரேல் இராணுவம் ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த ரொக்கெட் குண்டுவீச்சில் கட்டடங்கள் தகர்ந்தன. இரண்டு பாலஸ்தீனியர்கள் லேசான காயமடைந்தனர். எனவும் முன்னதாக இஸ்ரேல் நடத்திய மற்றொரு தாக்குதலில் ஆறு தீவிரவாதிகள் கொல்லப் பட்டதாக அறிவிக்கப்படுகிறது.



லண்டன் குண்டு வெடிப்பில் பலியானவர்களின் நினைவாக டரபல்கர் சதுக்கத்தில் விழிப்புக் கூட்டம் ஒன்றில் கூடியிருக்கும் மக்கள்.

# லண்டன் குண்டு வெடிப்பு தொடர்பாக பாகிஸ்தான் பாடசாலை ஒன்றில் விசாரணை

(இஸ்லாமபாத்)

லண்டன் குண்டுவெடிப்பு தொடர்பாக பாகிஸ்தானில் முஸ்லிம் பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவர்கள்,ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளிடம் நேற்று முன்தினம் தீவிர விசாரணை நடாத்தப்பட்டது. இத்தகவலை பாக். புலனாய்வு மற்றும் பாடசாலை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

லண்டன் குண்டு வெடிப்பை அரங்கேற்றியதில் ஷகாத் தன்வீர் என்ற மாணவனுக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. தன்வீர் பாக்,. பயணம் மேற்கொண்டிருந்த சமயத்தில் இங்குள்ள மதரஸா (மதப்பள்ளி) ஒன்றிற்கு சென்றதாக கூறப்படுகிறது.

மத்திய லாகூர் பகுதியில் ஜாமியா மன்சூருல் இஸ்லாம் என்ற பெயரில் இந்தப் பாடசாலை இயங்கி வருகிறது. இந் நிலையில், இந்தப் பாடசாலையை பாகிஸ்தான் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர். பள்ளியில் பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளிடம் தீவிர விசாரணை நடாத்தியுள்ளனர்.

# ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை விரிவாக்கம்; வாக்கெடுப்பு நடத்த ஜி-4 நாடுகள் கோரிக்கை

ஐ.நா பாதுகாப்பு சபை விரிவாக்கம் குறித்து ஜி-4 நாடுகள் கூட்டமைப்பின் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க யூனியன் மற்றும் ஜி-4 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் இன்றைய பேச்சுவார்த்தைக்குப் பின் தான் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிய வந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகிய நாடுகள் ஜி-4 நாடுகள் என்ற ஒரே குடையின் கீழ் கூட்டாக கோரிக்கை விடுத்து வருகின்றன. இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இருப்பினும் நான்கு நாடுகளும் தங்கள் கோரிக்கையில் உறுதியாகவுள்ளன.

ஐ.நா பாதுகாப்புச் சபை விரிவாக்கத்தின் போது இந் நாடுகள் இரண்டு நிரந்தர உறுப்பினர் பதவிகளையும், நிரந்தர உறுப்பினர் அல்லாத பதவி ஒன்றையும் கேட்கின்றன.

அதே போல் 53 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க யூனியன் அமைப்பும் தங்களுக்கு இரண்டு நிரந்தர உறுப்பினர் பதவிகளையும் இரண்டு நிரந்தரமற்ற உறுப்பினர் பதவியையும் கேட்கிறது.

ஜி-4 நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகள் கூட்டமைப்பு இரண்டும் இணைந்து கூட்டாக தீர்மானம் கொண்டு வர முயற்சிகள் மேற் கொண்டுள்ளன. ஆனால் இதற்கு வீட்டோ அதிகாரம் மற்றும் ஆபிரிக்கா கேட்கும் ஒரு கூடுதல் இடம் ஆகிய இரண்டும் முட்டுக் கட்டையாகவுள்ளன. இருப்பினும் இரு தரப்பிலும், தொடர் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.




லண்டனில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புள்ள சந்தேக நபர்களான (இடமிருந்து வவம்) ஹசிப் ஹுசைன், ஜெர்மைன் லிண்சே, மொகமட் சித்திக்ஷா, ஷாத்டன்வீர் ஆகியோரின் தொலைக்காட்சிப் படங்களை மெட்ரோ பொலிரின் பொலிஸ் வெளியிட்டுள்ளது.

## ஆப்கான் மலைவாசியை தூக்கிலிட்டனர்

(கந்தகார்)

ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லையில் ஜபூல் பகுதி மலைவாசியான மாலிக் அக்ஹா என்பவரை மரத்தில் தொங்க விட்டு கொலை செய்துள்ளனர். அமெரிக்காவுக்கு உளவாளியாக செயற்பட்டதால் இந்த மரணதண்டனையை நிறைவேற்றியதாக தலிபான்கள் அறிவித்தனர். ஆப்கானிஸ்தானில் பாராளுமன்ற தேர்தல் நடந்து முடிந்த பின்னர் கொல்லப்பட்ட தலைவர்களில் மாலிக் ஐந்தாவது நபர் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தியது. இதில் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் 24பேர் கொல்லப்பட்டனர். மற்றொரு சம்பவத்தில் ஆறு பொலிஸ்காரர்களை தலிபான்கள் சுட்டுக்கொன்றனர்.

# உலகின் மிக வயதான தம்பதிகள் 75 ஆண்டு வாழ்ந்து சாதனை

உலகின் மிக வயதான தம்பதி என்ற பெருமையை பிலடெல்பியாவைச் சேர்ந்த ஒரு தம்பதிகள் தட்டிச் சென்றுள்ளனர். இவர்களில் கணவருக்கு வயது 105. மனைவிக்கு வயது 100. ஹிட்லரின் நாஜிப் படையால் பல அச்சுறுத்தல்களை சந்தித்தாலும் அதை முறியடித்து வாழ்க்கை சக்கரத்தை தொடர்ந்து ஓட்டியது தான் இவர்களது சாதனையின் இரகசியம்.

மக்தா மற்றும் ஹெர்பெர்ட்டிற்கு கடந்த 1930 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. மக்தாவின் சொந்த ஊர் ஹங்கேரி. திருமணத்திற்குப் பின் மணமகன் ஹெர்பெர்டின் சொந்த ஊரான ஆஸ்திரியாவில் குடியேறினர். நாட்கள் உருண்டோடின. அக்கால கட்டத்தில் ஆஸ்திரியா உட்பட பல நாடுகளில் ஹிட்லரின் நாஜிப் படை ஆக்கிரமித்திருந்தது. திடீரென ஒருநாள் ஹெர் பெர்ட்டை நாஜிப் படையினர் பிடித்துச் சென்று இரண்டு மாதங்கள் சிறை வைத்தனர். இதனால் வெறுத்துப்போன மக்தாவும், ஹெர் பெர்ட்டும் நியூயோர்க் பயணமாயினர். அதன் பின்னர் பிலடெல்பியா வந்தனர். இவர்களது அன்பின் அடையாளமாக ஒரு மகன் பிறந்தார். பிலடெல்டியாவில் கம்பெனி ஒன்றில் ஹெர்பெர்ட்டுக்கு வேலை கிடைத்தது. வாழ்க்கையை இருவரும் ரசித்து வாழத் தொடங்கினர். ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்ததன் பயனாக 75 ஆண்டுகள் திருமண வாழ்க் கையை நிறைவு செய்துள்ளனர். இதற்கு முன்பாக பெர்சி மற்றும் பிளாரன்ஸ் என்ற தம்பதி உலகின் மிக வயதான ஜோடி என்ற பெயரை பெற்றிருந்தனர்.

# விழித்தெழ வேண்டியவர்களாக இருக்கிறோம்

# இனியும் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்கக் கூடாது

## -மட்டு. அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தயாமோகன்

(மட்டக்களப்பு)

**நாம் தூங்கிக்கொண்டிருக்காது விழித்தெழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். என மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தயாமோகன் கடந்த புதன்கிழமை காக்காச்சிவட்டை விஸ்ணு வித்தியாலயத்தில் இடம்பெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; இன்றைய இந்த நிகழ்வு ஒரு வித்தியாசமான வரவேற்கத்தக்க நிகழ்வாகும். சிறிலங்கா அரசின் அரசியல் வரலாற்றில் எந்த ஒரு கட்சியும் எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்யாத ஒரு விடயத்தினை எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து செய்து இருக்கின்றார்கள்.

அதற்காக அவர்களை இந்தக் கிராம மக்கள் பாராட்ட வேண்டும். தமிழீழப் போராட்டத்தின் அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எமது ஒரு பக்க பலமாக தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். மற்றும் ஒரு மாணவனின் கல்வி வளர்ச்சிக்கு பௌதிக வளங்கள் மட்டும் இருந்தால் போதாது. அந்தப் பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் அவர்களின் பெற்றோர்களின் முயற்சியும் வழி நடத்தலும் இருக்க வேண்டும். உதாரணமாக யாழ்ப்பாணத்தினை எடுத்துக் கொண்டால் போர்க் காலத்தில் அகதிகளாக இடம்பெயர்ந்த போது மரநிழலில் கல்வி கற்றார்கள். ஆனால் மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் கல்வியுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணம் உயர்வாக உள்ளது. காரணம் அங்கு பிள்ளைகளும், பெற்றோர்களும் பௌதிக வளங்களை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தங்கள் முயற்சியினாலும், பெற்றோர்களின் வழிநடத்தலினாலும் வளர்ச்சியடைந்தார்கள். பெற்றோர்கள் பட்டினியாக இருந்து கூடத் தங்கள் பிள்ளைகளின் கல்வியை வளர்த்தனர்.

அது போன்று பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுடன் இருக்க வேண்டும். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இந்த சிறிலங்கா பேரினவாத அரசுகள் தொடர்ந்தும் எம்மை ஏமாற்றி வருகின்றன. 1956ஆம் ஆண்டு தொடக்கம் இன்று ஒப்பந்தம் இடப்பட்டுள்ள சுனாமிப் பொதுக்கட்டமைப்புவரை நாம் ஏமாற்றப்பட்டவர்களாகவே இருக்கின்றோம். எனவே நாம் இனியும் ஏமாற்றப்பட்டவர்களாக இருக்கக் கூடாது என அவர் தெரிவித்தார்.

## புதிய நிர்வாகம் தெரிவு

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் பணி யாளர்கள் நலன்கருதி சமாசப்பணியாளர் தொழிற்சங்க புதியநிர்வாகம் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக ம.விம லாகரன், செயலாளராக வ.சிவகரன், பொரு ளாளராக திருமதி. செலின் கொன்சீலியா, உபதலைவராக ம.ஜெயக்குமார், உப செயலாளராக இலியோ பெனற் ஆகியோர் உட்பட 11 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (20)

# பெற்றோரை இழந்த 20 பிள்ளைகளுக்கு உதவி

(முல்லை)

முல்லைத்தீவில் சுனாமியினால் தாய், தந்தையை இழந்த 20 பிள்ளைகளுக்கு ரூபா பத்தாயிரம் வைப்பிலிட்ட வங்கிக் கணக்குப் புத்தகம் முல்லை. மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினால் கடந்த வெள்ளியன்று சமாசத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிதியினை அமெரிக்காவில் புலம் பெயர்ந்து வாழும் வைத்திய நிபுணர் கலாநிதி மூர்த்தி என்பவரால் தமிழீழ மருத்துவப்பிரிவினரின் வைத்திய கலாநிதி சிவபாலனிடம் வழங்கப்பட்டு அவரின் ஊடாக சமாசத்தில் வழங்கப்பட்டது.

முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழீழ மருத்துவப்பிரிவைச்சேர்ந்த வைத்திய கலாநிதி சிவபாலன், கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி ஆகியோர் ஏற்றினார்கள்.

கருத்துரைகளை வைத்திய கலாநிதி சிவபாலன் வழங்கினார். தொடர்ந்து வைப்பிலிட்ட புத்தகங்களையும் வைத்தியகலாநிதி சிவபாலன் வழங்கினார். இந்த நிகழ்வில் சமாசப்பணியாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (20)

# வடக்கு-கிழக்கு மாகாண அதிபர்களுக்கு உளவியல் விழிப்பூட்டல் திட்டம்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலை அதிபர்களுக்கு உளவியல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக மன அழுத்தத்திற்குள்ளாகியுள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் வழிநடாத்துவது தொடர்பாக அதிபர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி வரை நான்கு கட்டங்களில் அதிபர்களுக்கான உளவியல் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு,கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா, கல்முனை, அக்கரைப்பற்று, முல்லைத்தீவு, திருகோணமலை, மூதூர், வடமராட்சி ஆகிய ஒன்பது கல்வி வலயங்களில் இந்த விசேட நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

# கணினிப் பயிற்சி நிலையம் திறந்து வைப்பு

பொருண்மிய மதியுரையகத்தினால் கடந்த 15ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவிலில் பூநகரியில் உள்ள வேரவிலில் கணினிப்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு செ.கலைவாணன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. அடுத்து தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். அதைத்தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

இதனையடுத்து டென்மார்க் ரெக்நிறுவன இணைப்பாளர் திருமதி. சிறிதேவி கணினிப்பயிற்சி நிலையப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து கணினிப்பயிற்சி நிலைய கட்டடத்தொகுதியினைப் பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி திறந்து வைத்தார். நூல்நிலையக்கட்டடத்தை அரசியல் துறைதுணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்துவைத்தார். அடுத்து வேரவில் பாடசாலை அதிபர் கோடீஸ்வரனின் கருத்துரை இடம்பெற்றது.

இக்கருத்துரையில் பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பியிருக்கின்ற மாணவர்களுக்கு கணினிப்பயிற்சி நிலையத்தினைத் திறந்ததுடன் நூலகத்தினையும் திறந்து வைத்து இவ்வறிய பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியமையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

அடுத்து பூநகரி பிரதேசசபை செயலாளர் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கும் போது; போக்குவரத்து வசதியில்லாத பிரதேசத்தில் மாணவர்கள் கல்வியில் அக்கறை கொண்டு கணினிப் பயிற்சி நிலையத்தை அமைத்துக் கொடுத்து அத்துடன் நூல்நிலையத்தினையும் அமைத்துக்கொடுத்தமையினையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். டென்மார்க் இணைப்பாளர் திருமதி.சிறீதேவி கருத்துத் தெரிவிக்கும் போது; இந்நூல் நிலையத்தில் பலவகையான புத்தகங்கள் வரவேண்டும். அதன்மூலம் மாணவர்கள் பயன்பெறவேண்டும் கல்வி கற்பதற்கு போக்குவரத்து வசதி முக்கியம் என்ற அடிப்படையில் தான் டென்மார்க் தமிழ் இளைஞர் வலையாக்கம் இணைந்து துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது. கல்வித்தரத்தை உயர்த்தவேண்டும். நூல் நிலையம் வளர்ச்சியடைய வேண்டும். இதற்குப்பல நிறுவனங்களும் உதவும் எனவும் கூறினார்.

அடுத்து அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் சிறப்புரையாற்றும் போது ஓரளவேனும் இருக்கின்ற கணினியினைக் கொண்டு எல்லோரும் பயன்பெறவேண்டும் எனவும், சரியான கல்வி அறிவு, ஆற்றலை விருத்தி செய்வதற்கு இக் கணினிப்பயிற்சி நிலையம் உதவியாக இருக்கும் எனவும் உங்களின் கல்வி வளர்ச்சிக்கு வேறுபல நிறுவனங்களும் உதவிபுரியும் எனவும் கூறினார்.

அடுத்து டென்மார்க் ரெக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர் வலையாக்கத்தின் அனுசரணையுடன் வறிய மாணவர்களிற்குத் துவிச்சக்கரவண்டி கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதனையடுத்து நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

# ஆண்டான்குளத்தில் பலநோக்கு மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டல்

மன்னார் மாவட்டத்தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டக் கிராமமான ஆண்டான்குளத்தில் பலநோக்கு மண்டபமொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வெள்ளி காலை 7.30 மணியளவில் இடம்பெற்றது. இதற்கான நிதிப்பங்களிப்பை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகின்றது.

இக்கிராமத்தில் இடம்பெறும் பொது வைபவங்களையும், நிகழ்வுகளையும் நடாத்துவதற்குத் தேவையான மண்டபமொன்றின் அவசியத்தை உணர்ந்தும். இக்கிராம மக்களின் வேண்டுகோளிற்கமைவாகவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் இப்பொது மண்டபம் அமைக்கப்படவிருக்கின்றது. அரச அதிபரின் சிறப்புரையையும், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், மன்னார் மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கேசவன் ஆகியோரின் கருத்துரைகளும் இடம்பெற்றன.

# முன்பள்ளிச் சிறார்களின் கல்விக்கு வழிசெய்க!

கிளிநொச்சி ஜெயந்திநகர் கிராமத்தில் கரைச்சிப் பிரதேச சபையினரால் நடாத்தப்பட்டுவரும் சிறுவர் முன்பள்ளியானது எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் இயங்கி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி முன்பள்ளிக்கென ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் அமைக்கப்பெற்ற முன்பள்ளிக்கான கட்டடமானது எவ்வித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படாது சிதைவுற்ற நிலையில் உள்ளது.

இதன் காரணமாக தற்போது முன்பள்ளி மாணவர்களின் கற்கைச் செயற்பாடுகள் ஜெயந்திநகர் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் வைத்தே நடாத்தப் பெற்று வருகின்றன.

1986 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பெற்று நடாத்திவரப்படும் மேற்படி முன்பள்ளியானது 1990 ஆம் ஆண்டு சர்வோதயத்தினால் பொறுப்பேற்கப் பெற்று 1996 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை நடாத்தப்பெற்று வந்தது.


இக்காலப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் விளைவாக இம்முன்பள்ளிக் கற்கைச் செயற்பாடுகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நிறுத்தப்பெற்று 2001 ஆம் ஆண்டு மீளக்குடியமர்விற்கு பின்பு மீண்டும் முன்பள்ளி ஆரம்பிக்கப் பெற்றது.

அன்று முதல் இன்றுவரை கரைச்சிப் பிரதேச சபையினரால் மேற்படி முன்பள்ளி பொறுப்பேற்கப் பெற்று நடாத்தப் பெற்று வருகின்றது.

இம்முன்பள்ளியில் எழுபது சிறார்கள் தற்போது கல்வி பயின்று வருவதுடன் இரு ஆசிரியைகள் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொண்டு வந்தனர். இந்த இரு ஆசிரியர்களில் ஒருவர் கடந்த மாசி மாதமளவில் கரைச்சிப் பிரதேச சபை செயலக ஆயுள் வேதப் பிரிவிற்கு உள்வாங்கப் பெற்றமையின் காரணமாகத் தற்போது ஒரு ஆசிரியர் மூலமாகவே கற்பித்தல் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

மேற்படி கற்பித்தல் நடவடிக்கையினை மேற்கொண்டு வரும் ஆசிரியைக்கு பங்குனி மாதம் முதல் வேதனம் வழங்கப்படுமென பிரதேச சபையினர் தெரிவித்திருந்தும் பங்குனி மாதத்திலிருந்து இதுவரையும் பிரதேச சபையினரால் குறிப்பிட்ட மாத வேதனம் வழங்கப்படவில்லையென தெரியவந்துள்ளது

மேற்படி விடயம் தொடர்பாக முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; காலம்காலமாக பிரதேச சபையினரால் விரைவில் முன்பள்ளிக்கான கட்டடம் அமைத்துத் தரப்படும், ஆசிரியர் வேதனம் வழங்கப்படும் என உறுதிமொழிகள் வழங்கப்பட்டு வருவதனைத் தவிர எதுவித செயற்பாடுகளும் இடம்பெற வில்லையெனவும் இதற்கு முன்பள்ளிக் கட்டடமே தற்போது முன் உதாரணமாக சான்று பகர்



கின்றது எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்தே சுகாதார திணைக்களத்தினரின் கர்ப்பிணித் தாய்களின் கிளினிக் சிகிச்சை மற்றும் அத்தியாவசிய கிராம செயற்பாட்டு ஒன்றுகூடல்கள் இடம்பெற்று வருகின்றமையின் காரணமாக இந்நேரங்களில் சிறார்களின் கற்கை செயற்பாடுகள் என்பது சிரமங்களுக்குள்ளாகி விடுகின்றதெனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே எமது வருங்காலச் சிறார்களின் ஆரம்பக் கற்கை செயற்பாடுகளுக்கு ஏற்பட்டுள்ள இடையூறினை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு சிறார்களின் சுபீட்சத்திற்கு வழிசமைக்க முன்வரவேண்டுமென ஜெயந்திநகர் முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள் வேண்டிநிற்கின்றனர்.

**(கனகபுரச்சோதி)**

# வடமராட்சியில் சிறிலங்கா படைநிலைகள் துரிதகதியில் படையினரால் சீரமைப்பு

## -வீதி ரோந்தும் அதிகரிப்பு

(வடமராட்சி)

**யாழ். வடமராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பன புதிதாக அமைத்தும் பலப்படுத்தப்பட்டும் வருவதோடு வீதியோர ரோந்துகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.**

வடமராட்சியின் மிக முக்கியமான தளமாக அமைந்துள்ள புலோலி பல்லப்பை இராணுவ முகாம் காவலரண்கள் புனரமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்தோடு கலிகை இராணுவ முகாமும் காவலரண் அமைத்து பலப்படுத்தப்படுதோடு, ஆயுத தளபாட மாற்றங்களும் நிகழ்ந்துள்ளது.

இதேபோன்று மந்திகை பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. தேச விரோதிகளின் முகாமும் புதிதாக காவலரண் அமைத்து இராணுவம், பொலிசார் குவிக்கப்பட்டு முகாம் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், வீதியோர ரோந்தும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வழமைக்கு மாறாக பல தடவைகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதோடு, ஒவ்வொரு சந்திகளிலும் இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான வழமைக்கு மாறான இராணுவ நடவடிக்கைகளினால் இராணுவத்தினர் மீண்டும் யுத்தத்திற்கு சமிக்ஞை காட்டுகின்றனரா என பரவலாக மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. (கா)

# மனிதப் பாவனைக்குதவாத நீரில் குளிர்களி தயாரிப்பு!

## - மூன்று உற்பத்தி நிலையங்கள் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இருக்கின்ற பிரபலமான மூன்று குளிர்களி உற்பத்தி நிலையங்களில் மனித பாவனைக்கு உதவாத தண்ணீரில் குளிர்களி தயாரிக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறினார்.

யாழ்.நகரில் இருக்கின்ற குளிர்களி உற்பத்தி நிலையங்கள் மீது கடந்த வாரம் மேற்கொண்ட திடீர் சுகாதார பரிசோதனைகளின் போதே இவ்வாறு மனித பாவனைக்கு உதவாத தண்ணீரில் குளிர்களி தயாரிக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட குளிர்களி தொழிற்சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (33)

# படை நிலைகளைப் பலப்படுத்த பனை, தென்னை மரங்கள் தறிப்பு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் மீண்டும் புதிய படைநிலைகளை அமைக்கவும், பழைய படைநிலைகளை புனரமைக்கும் நடவடிக்கைகளிலும் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதன் தொடர் நடவடிக்கையாக படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள், வளவுகளில் இருந்து பனை, தென்னை மரங்கள் மீண்டும் அதிக அளவில் தறிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மற்றும் இராணுவத்தின் வீதி ரோந்து நடவடிக்கைகளும் அதிகரித்து இருப்பதுடன் புதிய புதிய இடங்களில் வீதிக் காவல் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (28)

# அம்பன் மருத்துவமனையை இயங்க வைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் அம்பன் மருத்துவமனையை மீளவும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயத்துள் காணப்படும் மேற்படி வைத்தியசாலை பலத்த சேதங்களுக்குள்ளான நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் மக்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளைத் தொடர்ந்து இது சுகாதாரத்திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து இவ்வைத்தியசாலையினை நிகொட் திட்டத்தின் கீழ் 5.7 மில்லியன் ரூபா செலவில் சுகாதாரத்திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதுவிரைவில் மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளது. (33)

# மருதங்குளம் அ.த.க. பாடசாலையில் கற்பிக்க ஆசிரியர்கள் பின்னடிப்பு!

## -படையினர் குறித்த அச்சமே காரணம்

(தென்மராட்சி)

இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து பொது மக்களின் போராட்டங்களின் மூலம் விடுவிக்கப்பட்ட மருதங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்பிக்க ஆசிரியர்கள் அச்சம் தெரிவித்துள்ளதால் பாடசாலையை மீள் இயக்குவதில் தொடர்ந்து சிக்கல் நீடிப்பதாக தென்மராடசி வலயக்கல்வி அதிகாரி தெரிவித்தார்.

படையினரின் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இப்பாடசாலை அமைந்துள்ளதால் தாம் அங்கு சென்று கல்வி கற்பிப்பது தங்களுக்கு பலவிதமான பிரச்சினைகளை உருவாக்கும் ஆசிரியர்கள் தெரிவிக்கும் அதே வேளை, கட்டட வேலைகளும் முழுமையாகப் பூர்த்தி அடையாமல் இருப்பதும் பாடசாலை திறக் கப்படாமைக்கு காரணம் என மேலும் அவர் தெரிவித்தார். (28)

# யாழ். மாவட்ட பாடசாலைகளில் சமூக உளவியல் மேம்பாட்டுத் திட்டம்

## -ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் சமூக உளவியல் மேம்பாட்டுத்திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் யாழ். மாவட்டத்தில் உள்ள 19 பாடசாலைகளில் முதற்கட்டமாக அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இதில் 6,7,8 ஆகிய தரங்களில் பயின்று வரும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். கடந்தகால யுத்த அனர்த்தங்கள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உளத்தாக்கங்களைக் கவனத்தில் கொண்டே இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட்டுளளது. இந்தத் திட்டத்தினால் யாழ்.மாவட்டத்திலுள்ள சுமார் 300 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். (33)

# சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் ஆவணங்கள் கிடைக்காதோர் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து சாரதி அனுமதிப்பத்திரம், மற்றும் வாகன ஆவணங்களுக்கு விண்ணப்பித்து நீண்டகாலமாகியும் அவை கிடைக்கப் பெறாதவர்களை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பினை யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் விடுத்துள்ளார்.

வாகன உரிமம், ஓட்டுனர் அனுமதிப்பத்திரம், என்பவற்றுக்கு விண்ணப்பித்த பலருக்கு இன்னமும் அவை கிடைக்கப்பெறவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

இந்த நிலைமையை கவனத்தில் கொண்டே யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் மேற்படி அறிவிப்பை விடுத்தார். இதற்கமைவாக சம்பந்தப்பட்டவர்கள் வரும்போது தம்விண்ணப்பம் தொடர்பான அத்தாட்சிப் பத்திரங்களையும் எடுத்து வருமாறும் அறிவித்துள்ளார். (33)

# புதிய பேருந்து நிலையத்தை விரைவாக திறக்கக் கோரல்

(தென்மராட்சி)

கொடிகாமம் புதிய பேருந்து நிலையத்தை விரைவாக திறந்து வைக்க வேண்டும் என்று பொது மக்கள், வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வரும் மழை காலத்துக்கு முன்னராக கொடிகாமம் புதிய பேருந்து நிலையத்தை மக்கள் பாவனைக்கு திறந்து வைக்க வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புதிய பேருந்து நிலைய கட்டடத்தின் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் கடந்த இரண்டு மூன்று மாதங்களாக எந்த வித பணிகளும் முன்னெடுக்கப்படாமல், வெறுமனே காட்சியளிப்பதாகவும், பழைய பேருந்து நிலையம் எந்தவித அடிப்படை வசதிகள் அற்று இருப்பதால் வரும் மழைகாலத்திற்கு முன்னர் இப்பேருந்து நிலையத்தை திறந்து வைக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் மற்றும் சந்தை வியாபாரிகள், வர்த்தகர்களிடம் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

# பொதுமயானத்தில் சிரமதானம்

(கரவெட்டி)

கரணவாய் கிழக்கு கிராய் பொது மயானம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இச்சிரமதானப்பணியை கரணவாய் கிழக்கு இளைஞர் கழகம், விவசாய சம்மேளனம், மாதர் கிராம அபிவிருத்திசங்கம் ஆகியன இணைந்து கிராமசே கர் எ.எஸ் தங்கத்துரையின் வழி நடத்தலில் மேற்கொண்டன. (கா)

# சாவகச்சேரி பிரதேசசபை அலுவலகம் இடமாற்றம்

(தென்மராட்சி)

கொடிகாமம் கச்சாய் வீதியில் இயங்கி வரும் சாவகச்சேரி பிரதேச சபை அலுவல கத்தை கொடிகாமம் பருத்தித்துறை சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பிரதேச சபை விழா மண்டபத்திற்கு மாற்றம் செய்யவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது இடநெருக்கடியால் அலுவலக பணிகளை மேற்கொள்வது கஷ்டமாக இருப்பதாகவும், ஊழியர்களின் சிரமங்களைத் தவிர்க்கும் முகமாக புதிய பிரதேச சபை அலுவலகம் கட்டப்படும் வரை இவ் வலுவலகம் விரைவில் பிரதேச சபை விழா மண்டபத்தில் இயங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (28)

# விளையாட்டு கழகங்கள்,வீரர்களின் பெயர்விபரம் படையினரால் கோரல்

(புத்தூர்)

யாழ்.புத்தூர் ஆவரங்கால் பிரதேசங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களினதும் விளையாட்டு வீரர்களினதும் விபரங்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றது சிறிலங்கா இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு அந்தப் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் மத்தியிலும் மக்களிடையேயும் பெரிதும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்தப் பகுதியில் கழகங்களினது விபரங்களை சேகரிப்பவர்கள் தாங்கள் விளையாட்டுக் கழகங்களுக்கும், வீரர்களுக்கும் அன்பளிப்புப் பொருட்கள் வழங்குவதற்காகவே இந்த விபரங்களை சேகரிப்பதாக அந்தப் பகுதி மக்களுக்கு தெரிவித்திருக்கின்றனர்.

மிகவும் அண்மையில் இந்தப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற விளையாட்டுக் கழகமொன்று தேசியத்தை வலியுறுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (கீ)

# வயிற்றோட்ட நோய்க்கு இலக்காவோர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வயிற்றோட்ட நோய்க்கு இலக்காவோர் தொகை அதிகரித்து வருவதாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

யாழ். போதனா வைத்தியசாலைப் புள்ளிவிபரங்களை மேற்கோள் காட்டியே சுகாதார சேவைகள் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் 6,264 பேர் வயிற்றோட்டத்துக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருப்பதாகவும் இதில் 2002 ஆம் ஆண்டில் 2168 பேரும் 2003 ஆம் ஆண்டில் 1846 பேரும் 2004 ஆம் ஆண்டில் 2250 பேரும் வயிற்றோட்டத்திற்காக சிகிச்சை பெற்றிருக்கின்றமையும் சுட்டிக்காட்டப் படுகிறது.

இதற்கு யாழ். மாவட்டத்தில் உணவு சுகாதாரம் பேணுதலில் உள்ள குறைபாடே காரணம் எனவும், இது குறித்து பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறும் சுகாதார சேவைகள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (33)

# வாக்குறுதிகளை மட்டும் வழங்கும் சந்திரிகாவின் போக்கால் ஆபத்து!

**கேசர அபேவர்தன (டெய்லி மிரர்) தமிழில் வடிவேல்**

வடக்கு கிழக்குப்பகுதிகளில் நிலைமை மோசமடைந்து வரும் நிலையில் சனாதிபதித் தேர்தலுக்கான தினம் பற்றிய சர்ச்சை சிறிலங்கா அரசியலில் முக்கிய இடம் பிடித்துள்ளது. குறிப்பிடக்கூடிய பெரும் மோதல் சம்பவங்கள் வ்டக்கு கிழக்கில் இடம் பெறவில்லையாயினும் அங்கு ஒரு பதற்றமான சூழல் வளர்ச்சியடைகின்றது. குறிப்பாக கிழக்கில் நடைபெறும் சம்பவங்கள் சமாதானத்தை விரும்புவோரை



கவலையடையச் செய்வதுடன் மக்களை சோர்வடையச் செய்துள்ளது. அன்றியும் விடுதலைப்புலிகளுடன் ஒரு இணக்கப் பாட்டுக்கு வர அரசாங்கத்துக்கு ஒரு உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. இந்த சிறுசம்பவங்களால் மீண்டும் பாரிய யுத்தம் ஒன்று வெடிக்குமோ என அநேகமானோர் அங்கலாய்ப்புடன் இருக்கின்றனர். அரசு புலிகளுடன் அக்கறையுடன் சமாதான முன்னெடுப்பு தொடர்பாக பேச்சு நடத்த வில்லை என நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகின்றது. சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க மிகச் சிறியளவு முயற்சிகளே எடுக்கப்பட்டுள்ளன.

சுமார் ஒன்றரைவருடங்களுக்கு முன்பு சனாதிபதி சந்திரிகா ஐ.தே முன்னணி அரசின் மூன்று அமைச்சுக்களைக் கைப்பற்றியதும் தென்பகுதி அரசியலில் ஒரு ஸ்திரமின்மை உருவானது. அத்துடன் ஒரு தீர்க்கமான புரிந்துணர்வு அற்றவர்களான ஜே.வி.பியினருடன் நிலையற்ற கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டதால் சமாதான முன்னெடுப்புக்களை கொண்டுசெல்லும் சாத்தியம் இல்லாது விட்டது. சந்திரிகா ஐ.தே கட்சி அரசை தூக்கி எறிந்ததாலேயே இன்று சமாதானம் பற்றிய ஒரு ஸ்திரநிலை இல்லாமல் போனது.சமஷ்டித்தீர்வுடன் கூடிய டோக்கியோ ஒஸ்லோ மாநாட்டில் நடைபெற்ற பேச்சுக்களின் அடிப்படையிலான ஐக்கிய இலங்கைக்குள் ஒரு நிரந்தரத் தீர்வுத் திட்டமாக ஐ.தே முன்னணி முன்வைத்த தீர்வும் தற்போது முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலைக்குச் சென்றுள்ளது.

சமாதானத்துக்கான ஒரு நல்ல சூழலை உருவாக்குவதற்குப் பதிலாக தேசப்பற்று இயக்கமும் அரசியல் இலாபம் கருதும் சில சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர்களும் ஜே.விபியுடன் இணைந்து குழப்பநிலையை உருவாக்கியுள்ளதுடன் வழி தெரியாமலும் உள்ளனர்.

இதற்கிடையில் ஆங்காங்கு நடைபெறும் வன்முறைகள் சமாதான உடன்படிக்கைக்கு ஆபத்தை தருவனவாக காணப்படுகின்றன சமாதான உடன் படிக்கையை கிழித்து எறிய வேண்டும் என கூரைமீதேறி கொக்கரிப்பவர்கள் வேறு மாற்று யோசனைகளையும் முன்வைப்பதுமில்லை. ஒரு வருடமாக அவர்கள் மீண்டும் யுத்தம் ஒன்றுக்கே நாட்டை இட்டுச் செல்கின்றனர்.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திட்ட போது பல்வேறு வாக்குறுதிகளையும் விமர்சனங்களையும் சந்திரிகா தெரிவித்த போதும் இது வரை ஒன்றையும் அவர் நடைமுறைப் படுத்துவதாகத் தெரியவில்லை. அது தொடர்பில் விடுதலைப்புலிகளுடன் எதுவிதபேச்சுக்களையும் ஆரம்பிக்கவில்லை பொதுக்கட்டமைப்பு தொடர்பில் ஜே.வி.பியினரும் ஜாதிக ஹெல உறுமயவினரும் உயர்நீதிமன்று வரை சென்று அதனை நடைமுறைப் படுத்துவதை தடுத்து நிறுத்தியுள்ளனர். அன்றியும் அரசு சார்பு அங்கத்தவரான அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் அவர்களுக்கு ஆதரவு வழங்கி யுள்ளார். அதன்படி பொதுக் கட்டமைப்பில் தெரிவிக் கப்படும் நான்கு முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்த நீதிமன்றம் இடைக்கால தடையை அறிவித் துள்ளது அந்த நான்கு விடயங்களும் கிளிநொச்சியை மையமாகக் கொள்ளும் அலுவலகத்தை தடுப்பது மீள் கட்டுமானத்துக்கான காணி வழங்கும் அதிகாரத்தை நிறுத்துதல் நேரடியான சர்வதேச உதவிகளை நிறுத்து தல் போன்றவை அந்த சரத்துக்களாகும். உயர் நீதிமன்றம் அளித்த இந்த தீர்ப்பின் மூலம் பொதுக்கட்டமைப்பு செயற்பாடு முற்று முழுதாக தடைப்பட்டுள்ளது.

உலக வங்கி வழங்க முன் வந்த உதவி பற்றி கடந்த 11 ஆம் திகதி திறைசேரி செயலர் ஜயசுந்தரவுக்கு உலக வங்கிப் பணிப்பாளர் கடிதம் அனுப்பியிருந்தார். அதில் சுனாமி பாதிப்பிற்குள்ளானவர்களுக்கான அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் உருவான பொதுக்கட்டமைப்பு தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் வழங்கப்படும் நிதி



நன்றி டெய்லி மிரர்

சம்பந்தமாக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதாகவும் இந்தப் பொதுக்கட்டமைப்பை அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அதனை நிறைவேற்றும் அதிகாரத்தை சட்ட மா அதிபரிடம் பெற்றுக் கொள்ளுமாறும் கோரியிருந்தது. இந்த நிதி உதவியின் பாதுகாவலர் என்ற வகையில் அதற்கு வழங்கப்படும் நிதியைப் பயன்படுத்தும் சட்ட விதிகள், நடவடிக்கைகள் தொடர்பில் அரசு அனைத்து தரப்பினரதும் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.



அக்கடிதத்துக்கு இணங்க திறைசேரி செயலர் ஜயசுந்தர உடனடியாக சட்டமா அதிபருக்கு அதனை விளக்கிக் கடிதம் அனுப்பினார்.

இதற்கிடையில் நாட்டின் சனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும் நோக்கில் அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையும் பொதுக்கட்டமைப்பு விவகாரம் தொடர்பில் அரசு வீணான அச்சத்தை கொண்டிருக் கின்றது. சனாதிபதித் தேர்தல் ஒன்றை இந்த வருடமே நடத்தக் கோரி ஐ.தே கட்சி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தி முடித்துள்ளது. இந்தப் பேரணியில் பல இலட்சம் பேர் கலந்து கொண்டமையை தொலைக்காட்சிகளில் காணக்கூடியதாக இருந்தது. பத்திரிகைகளும் அதனைப் பெரிது படுத்தி செய்தி வெளியிட்டிருந்தன. மக்களின் ஆதரவைக் கண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க விரைவில் சனாதிபதித் தேர்தல் நடத்தப்படலாம் என்றும் தான் சனாதிபதியாக வரலாம் என்றும் எதிர்பார்த்திருக்கின்றார். ஆகவே நாட்டின் அதிகார மிக்க சனாதிபதிப் பதவி எதிர்க் கட்சியான ஐ.தே. கட்சியிடம் சென்றால் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது. பெரும் மக்கள் பேரணி திரண்டு ஆர்ப்பாட்டம் செய்த போதும் சனாதிபதித் தேர்தல் எப்போது நடத்த வேண்டும் என்பதை தேர்தல் ஆணையாளரே தீர்மானிப்பார்.

இதற்கிடையில் இன்னும் ஒரு பிரச்சினையும் தோன்றியுள்ளது. அதாவது பிரதமர் மகிந்தராஜபக்ஷவும் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் தனது மாற்றத்தை வெளிப்படுத்தியிருப்பது போல் அமைதி யாகக் காணப்படுகிறார். காரணம் இவரும் அடுத்த சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் நோக்கத்துடன் காணப்படு வதாகும்

எனவே சுனாமி பாதிப்பிற்குள்ளான வடக்கு கிழக்குப் பகுதி மக்களின் புனர்வாழ்வு மீள்குடியமர்வுக்கான நிதியைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் கைச்சாத்திடப் பட்ட பொதுக்கட்டமைப்பு உயர் நீதிமன்றத் தின் இடைக்காலத்தடை உத்தரவினாலும் சிறிலங்காவின் அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையாலும் ஸ்தம்பித நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதும் வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி உயர் நீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கும் வரையிலும் சிறிலங்கா அரசியலில் ஒரு நிலையான ஆட்சி அதிகாரம் ஏற்படும் வரையிலும் செயற்படுத் தப்படாது என்பதும் பாதிப்பிற்குள்ளா னவர்கள் தொடர்ந்தும் குடிசைகளில் காலம் கழிக்க வேண்டியிருப்பதும் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது □

# மட்டக்களப்பு அரச வைத்தியசாலைக்கு போலந்தால் வைத்திய உபகரணங்கள் வழங்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு போலந்து நாட்டினால் 50 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் சனிக்கிழமை கையளிக்கப்பட்டது. இது தொடர்பான வைபவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிமனையில் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.தேவராஜன் தலைமையில் நடைபெற்றது.

போலந்து நாட்டைச் சேர்ந்த ஓரீட்சா கிறிஸ்ட்டா சறிட்டி நிறுவனத்தினால் அதன் சார்பாக டாக்டர் நேஸ், டாக்டர் ஸ்டீ வசீதோமஸ் ஆகியோர் கலந்து கொண்டு வைத்திய உபகரணங்களை வழங்கி வைத்தனர். இதேவேளை கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் போலந்து நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட பெறுமதி மிக்க உபகரணங்கள் வைத்தியசாலை பணிப்பாளர் தேவராஜனின்பெரும் முயற்சினாலேயே பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கிடைக்கப்பெற்றுள்ளது.

# கறுவாக்கேணியில் படையினர் வீடுவீடாக தேடுதல்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கறுவாக்கேணியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினால் வீடு வீடாகத் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது. இராணுவத்தினர் எவ்விடயத்தினையும் கூறாது சோதனையிட்டனர்.

இதனால் கிண்ணியடி மிரா வோடை சுங்காங்கேணி போன்ற தமிழ்ப் பிரதேசத்தில் இருந்து கறுவாக் கேணியூடாக வாழைச்சேனை நகருக்குப் பயணிக்கும் மக்கள் பெரும் அச்சத்துடன் சென்றதாக தெரிவித்தார்கள்.


இதேவேளை வீடு ஒன்றுக்கு சென்ற இராணுவத்தினர் வீட்டு உரிமையாளரிடம் உழவு இயந்திரங்களை முகாமுக்கு கொண்டுவருமாறு பணித்துள்ளார். எந்த விளக்கமும் இல்லை, இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அச்சம் கொண்டுள்ளனர். ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.




## 07.07.2005—
## —13.07.2005

**07**

மத்திய லண்டனில் சுரங்கரயில் போக்குவரத்து வலைப்பின்னல் அமைப்பின் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களினாலும், இரட்டைத் தட்டுப் பேருந்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பின் காரணமாக லண்டனில் பெரும் பதற்றமேற் பட்டதுடன் இச்சம்பவத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் பலியானதுடன் 700 பேர் வரை காயம்.



மெரோக்கி எனும் துறைமுக நகரிலிருந்து டானாமேரா எனுமிடத்தை நோக்கி பயணிகளுடன் புறப்பட்ட 'டிகுல்' என்ற படகு இந்தோனேஷிய கிழக்குக் கடலில் மூழ்கியதில் 200 இற்கும் மேற்பட்டோர் பலி.

இந்தியா நாகர் கோயில் வடசேரியில் கனகமூலம் சந்தையில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் கடைகளுக்குள் உறங்கிக் கொண்டிருந்த ஐந்து வியாபாரிகள் உடல் கருகிப் பலி, நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து சாம்பராயின.



**08**

தென்னமெரிக்காவில் வீசிய டெனிஸ் சூறாவளி காரணமாக கியூபா, ஹெயிட்டியில் 32 பேர் பலி.

ஈராக் பாதுகாப்பமைச்சர் ஈரானுக்கு விஜயம் ஈரான்-ஈராக் ஆகிய நாடுகளுக்கிடையே இராணுவ ஒத்துழைப்பு பரிமாறிக் கொள்வது தொடர்பான பேச்சுக்களை நடத்தவே இவர் விஜயம் செய்தார்.

**09**

மெக்சிக்கோவின் தென்பகுதியில் இடம்பெற்ற எரிவாயுக் குழாய் வெடிப்பின் காரணமாக ஒருவர் பலியானதுடன் பலர் காயம்.

கிர்கிஸ்தானில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலில் பதில் சனாதிபதி அமோகவெற்றி.

சூடானிய உப சனாதிபதியாக முன்னாள் கிளர்ச்சித் தலைவர் ஜோன்கரங் பதவியேற்பு.

ஆப்கான் தென்பகுதியில் தலிபான் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட ஆறு பொலிசாரையும் தாம் சிரச்சேதம் செய்துவிட்டதாக தலிபான் தீவிரவாதிகள் அறிவிப்பு.

**10**

ஆசிய நாடுகளுக்கான உத்தியோக பூர்வ விஜய மொன்றை மேற் கொண்டு அமெ



ரிக்க இராஜாங்க செயலாளர் கொண்டலீசா ரைஸ் சீனா பயணம்.

**11**

லண்டனில் உள்ள லீட்ஸ் பகுதியிலுள்ள மசூதிமீது தீவைக்கப்பட்டது.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள இராணுவத்துக்கு ஆள்திரட்டும் நிலையமொன்றுக்குள் இடம்பெற்ற தற்கொலை குண்டு வெடிப்பில் 21 பேர் பலி, 31 பேர் காயம்.



கொலம்பியாவில் வீதியோரம் இருந்த உணவகம் ஒன்றைச்சுற்றிவளைத்து தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் மூவர் பலி.

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் வடக்கே கஹ்லிஸ் நகரில் இடம்பெற்ற தாக்குதலில் 11 ஈராக் வீரர்கள் பலி.



சீனாவிலுள்ள சிங்ஜியாங் என்ற பின்தங் கிய மாநிலத்தில் ஷன்லொங் சதுக்கத்திலுள்ள நிலக்கரி சுரங்கவாயு விபத்தில் 66 பேர் பலியான துடன் ஏழு பேர் காணாமல் போயுள்ளனர்.

இரண்டாம் உலகப்போரின் 60 ஆம் ஆண்டு நிறைவுவிழா லண்டனில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

**12**

ஸ்பெயினில் இடம்பெற்ற காளை விரட்டும் விழாவில் பொலிசார் உட்பட நால்வர் காயம்.

ரோமேனியாவில் பெய்துவரும் கடும் மழையால் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. இதனால் ஏழு பேர் பலியானதுடன் ஆயிரக் கணக்கானோர் வெளியேறியுள்ளனர்.

**13**

பாகிஸ்தானிலுள்ள சிந்து மாகாணத்தில் சர்கத்ரயில் நிலையத்தில் மூன்று ரயில் வண்டிகள் மோதியதில் 200 இற்கும் அதிகமானோர் பலி;ஆயிரத்திற்கு மேற்பட்டோர் காயம்.



ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு அருகில் அல்-ஜெடிதா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் 24 சிறுவர்கள் பலி.



# லெப்.கேணல் றீகனின் நினைவு நிகழ்வுகள் வெல்லாவெளியில் உணர்வுடன் அனுஷ்டிப்பு



(மட்டக்களப்பு)

லெப்.கேணல் றீகனின் 15ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று முன்தினம் வெல்லா வெளியில் நடைபெற்றது. காலை 10.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. லெப்.கேணல் றீகனின் நினைவுத் தூபிக்கு முன்பாக இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

லெப்.கேணல் றீகன் நினைவாக நடாத்தப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவான முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக் கழ கம் மற்றும் மண்டூர் மதிஒளி விளையாட்டுக்கழகங்களு கிடையில் போட்டி ஆரம்பமானது. மாவட்ட விளையாட்டுப் பொறுப்பாளர் ரதன் போட்டியினை கைலாகு கொடுத்து ஆரம்பித்து வைத்தார். இந்தச் சுற்றில் முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

இதனையடுத்து நினைவுத் தூபி முன்றலில் நினைவுக் கூட்டம் இடம்பெற்றது. நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், தளபதி பிரபா, முதலீட்டுப் பொறுப்பாளர் றொசான், மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி யோகராஜ், மாவடிமுன்மாரி அரசியல் துறைப் பொறுப்பாளர் கார்த்திக், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, பா.அரியநேத்திரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட அரசியல துறை பொறுப்பாளர் இளந்திரையன், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரியநேத்திரன், கனகசபை ஆகியோர் நினைவுரையாற்றினர். இதனையடுத்து வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களுக்கு பரிசில்கள் மற்றும் நினைவுக் கேடயம் என்பன வழங்கப்பட்டது.

லெப்.கேணல் றீகன் ஒரு தலை சிறந்த போர்த் தளபதி யாவார் மட்டு. அம்பாறை மாவட்டத்தின் துணைத் தளபதியாகப் பணியாற்றிய அவர், பல வெற்றிகரமான இராணுவச் சாதனைகளை நிலை நாட்டினார். றீகனின் இராணுவ வல்லமைக்குப் பழிவாங்க வெறிகொண்ட சிங்களப்படை அவரது பெறறோர் சகோதரர் உட்பட 17 இரத்த உறவுகளைப் படுகொலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காற்றுடன் கூடிய மழையால் 10 இற்கும் அதிகவீடுகள் சேதம்!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் காற்றுடன் கூடிய பெருமழையால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகளும், மரங்களும் சேதமாக்கப்பட்டன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருகையில் கடந்தவியாழனன்று மாலை மாயவனூர் குடியிருப்பை அண்டிய பகுதிகளில் மழையுடன் காற்றும் வீசத் தொடங்கியதால் அப்பகுதியிலேயே பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதத்திற்குள்ளாகியதுடன் பெரிய மரங்களும்,மா, பலா, வாழை போன்ற மரங்களும் முறிந்து வீழ்ந்தன. மற்றும் காற்றினால் முறிக்கப்பட்ட மரங்கள் வீதிகளில் காணப்பட்டதால் அதனை அகற்றும் பணியில் அப்பகுதி மக்களும், கிராம சேவையாளரும் ஈடுபட்டனர். (12)

# முறைசாராக்கல்விப் பிரிவில் கணனிப் பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி வலய கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவில் இலவசக் கணனிப் பயிற்சியும் தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பயிற்சியும் நடைபெறவுள்ளது.

க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியெய்தியவர்கள் மேற்படி பயிற்சிக்கு தோற்றலாமெனவும், மேற்படி பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 20 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளதென கிளிவலயக்கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசா தெரிவித்துள்ளதுடன் மேற்படிப் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வுக்கு தோற்றுபவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பம், கல்வித் தகைமை சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் ஏனைய பொருத்தமான ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் சமுகமளிக்கும்படியும் வேண்டியுள்ளார். (சோ)

# கிராம அபிவிருத்திச்சங்க கட்டடம் அமைப்பு

மாந்தை மேற்கு, நானாட்டான் முசலி, மடு போன்ற பிரதேசங்களிலுள்ள கிராமங்களில் கிராம அபிவிருத்திச்சங்க செயலக கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியினை நிகொட் திட்டத்தின் ஒதுக்கீடு செய்துள்ளது.

இக்கட்டடத்தொகுதியில் கூட்டுறவு சங்கக்கிளை, தபால் அலுவலகம், பாலர் பாடசாலை,விவசாயகடற்றொழில் அலுவலகம், கிராமஅதிகாரியின் அலுவலகம்' போன்றன அமையும் எனவும் இதற்கு கிராம அலுவலர் பொறுப்பாக இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு செயலகத்திற்கும் இரண்டு மில்லியன்ரூபா செலவிடப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.(18)

# மூன்று துவிச்சக்கர வண்டிகள் ஒரு வாரத்தில் திருட்டு

(வடமராட்சி கிழக்கு)

பளைப் பிரதேசத்தில் ஒரு கிழமையில் மூன்று துவிச்சக்கர வண்டிகள் திருடர்களினால் திருடப்பட்டுள்ளது. ஒரு துவிச்சக்கரவண்டி துவிச்சக்கர வண்டி திருத்தகத்தில் திருத்துவதற்காக கொண்டுவந்து விடப்பட்ட இடத் தில், அடுத்தது பளைச்சந்தையில் மீன் வாங்குவதற்காகக் கடையின் முன விட்டுவிட்டு சென்றபோது, மற்றையது வீதியில்விட்டபோது திருடப்பட்டதும் ஒரு கிழமையில் சில நாட்கள் இடை விட்டு திருடப்பட்டுள்ளன. இவைகள் பற்றி பளை காவல் பணிமனையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (11)

# சிலாவத்தை த.வி. முதலாமிடம்

(முள்ளியவளை)

முல்லை வலய பாடசாலைகளுக்கிடையி லான சிறுவர் அரங்கு நாடகப் போட்டி கடந்த வெள்ளிக் கிழமை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மேற்படி சிறுவர் அரங்கு நாடகப் போட்டியில் சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் முதலாம் இடமாக தெரிவாகியுள்ளது என சிலாவத்தை தமிழ் வித்தியாலய முதல்வர் க. திருக்குமரன் தெரிவித்துள்ளார். (ஆ)

# பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மீது மோசடிப் புகார்

# ஐ.தே.க. சட்ட நடவடிக்கைக்கு தயார்!

## இன்று முறையிட ஏற்பாடு

**சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தும் போராட்டங்களை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.**

கடந்த வியாழக்கிழமை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அக் கட்சியின் முக்கிய தலைவர்கள் கூட் டத்தில் இதற்கான முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண நிதி யான 80 மில்லியன் ரூபாவை தனது சொந்த நிதிக் கணக்கில் மகிந்த ராஜபக்ஷ முதலீடு செய்த மோச டியை கொழும்பு ஊடகங்கள் அண் மையில் அம்பலப்படுத்தியிருந்தன.

ஐ.தே.க கூட்டத்தில் இதைச் சுட் டிக்காட்டிப் பேசிய ரணில் விக்கிரம சிங்க, இது ஒரு குற்றவியல் நடவ டிக்கை என்று சாடினார். இது தொடர் பாக அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசாவுடனும் ரணில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இத்தகவல்களைத் தெரிவித்த கொழும்பு மாவட்ட ஐ.தே.க.பாரா ளுமன்ற உறுப்பினர் ரவி கரு ணாநாயக்க, பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ மட்டுமல்லாது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சட்ட விதிகளை மீறியுள்ள சம்ப வங்களை தமது கட்சி முன்னெடுக் கும் என்றார்.

லக்ஷ்மன் கதிர்காமர் தனது வெளி நாட்டுப் பயணத்தின் போது தமது துணைவியாரையும் அழைத்துச் செல்வதன்மூலம் வெளிவிவகார அமைச்சின் நிதி பாரியளவில் முறை கேடாகப் பயன்படுத்தப்பட்டு வருவது அண்மைக்காலமாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது என்று கூறிய அவர் இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றையும் அனுப்பி யுள்ளது என்றார்.

இந்நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது குற்றவியல் சட் டத்தின் கீழான நடவடிக்கை எடுக்க க்கோரி குற்றத் தடுப்பு திணைக் களத்திடம் இன்று திங்கட்கிழமை ஐதேக. புகார் அளிக்கவுள்ளது. அப்போது கதிர்காமரின் மீதும் புகார் கொடுக்கப் படக்கூடும் கேகாலை மாவட்ட ஐ.தேக. பாராளு மன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் இப் புகாரை அளிக்கவுள்ளார்.

இது தொடர்பான புகார் வரைவை கடந்த வியாழக்கிழமையன்று முன்னாள் சட்ட மா அதிபர் திலக் மாரப்பன தயாரித்ததாகவும்அக்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## எதிர்க்கட்சித் தலைவர் அமெரிக்கா பயணம்


எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அமெரிக்காவிற்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளார். அமெரிக்காவில் நடைபெறும் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொண்டலீசாரைஸ் ஆகியோரை ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசுவார் என தெரிவிக்கப்படுகின்றது. (32)

# இரு தலைகளுடன் பிறந்த அதிசயக் கன்றுக்குட்டி

(கொழும்பு)

மெல்கிரிபுர தேசிய கால்நடை வளர்ப்பு பண்ணையில் முரா இனத்தைச் சேர்ந்த பசு ஒன்று இரண்டு தலைகளுடன் கன்று ஒன்றை ஈன் றுள்ளது. இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டுவாய்கள் இதற்கு உள்ளது. கழுத்துப்பகுதி அதிக பாரம் என்ற படியால் அக்கன்று கழுத்தைத் தூக்கி நடக்க முடியாமல் இருக்கின்றது.

அதற்கு ஒரு நுரையீரல் இருக்கின்றபடியால் பாலை ஒரேதடவையில் கொடுக்க வேண்டியுள்ளது. தாய்ப்பசுவிடமிருந்து பாலைக்கறந்து இரண்டு போத்தல் களில் பால் கொடுக்கப்படுகின்றன என்று அப்பண்ணை பராமரிப்பாளர்கள் கூறுகின்றனர்.



# கறுவாத்தோட்டம் படுகொலை முப்பது பேரிடம் விசாரணை

(கொழும்பு)

கறுவாத்தோட்டம் நோந்த பிளேஸ் பகுதியில் நான்கு பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக 30 பேரிடம் பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். இவர்களைக் கொலை செய்வதற்கு முன்பதாக கடத்திச் சென்றதாகக் கூறப்படும் முறைப்பாடு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட் பொலிஸ் அத்தியட்சகர் சரத் லூடுகே கூறினார்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கென விசேட குழுவொன்று அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் கூறினார். இது தொடர்பாக இதுவரை விசாரணை செய்யப்பட்டவர்களிடமிருந்து இந்தக் கொலையுடன் தொடர்புடைய எதுவித தகவலும் வெளியாகவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

அண்மையில் கொலை செய்யப்பட்ட நான்கு பேரில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் மத்திய மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும் அடங்குவதால் அவருடன் நெருங்கிப் பழகியவர்களிடமும் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று சரத் லூடுகே தெரிவித்தார்.

கொழும்பு கறுவாத்தோட்டப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் வர்த்தக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாமா? என்பது குறித்தும் பொலிசாரின் கவனம் திரும்பியுள்ளதாகத் தெரியவருகின்றது.


# ஏலவிற்பனை

காலம்~2005.07.24

பொருள்விரிப்பு...
- இலத்திரனியல்பொருட்கள்
- மின்னியற் பொருட்கள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- புடைவை வகை
- அழகுசாதனப்பொருட்கள்

இடம்:கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக

மேலதிக விபரம் வெகு விரைவில்......

(சி.12331)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியில்
20 ஆண்டுகளாக
ஆசிரியர், உபஅதிபர்,
அதிபராக
அரும்பணியாற்றி
இடம் மாற்றலாகிச்
சென்றுள்ள
திருமதி கோ. தேவராசா
அவர்களை
மென்மேலும் பணிசிறக்க,
வாழ்வில் இன்பம்பெருக
வாழ்த்துகின்றோம்

கல்லூரிக் கழகம்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி

(6368)


# 9 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

| பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 18 – 05 – 1977 |  | 18 – 07 – 1996 |

## 2 ஆம் லெப்ரினன்ட் அஜித்தா குமாரவேலு பகீரதி (சுதா)

(மல்லாவி)

மன்னன் காலத்து மண்ணை
மாவீரராய் காத்த மங்கை நீ!
தொடர்ந்த பணி கண்டு
மனம் நெகிழுது-அம்மா
தாய்மடியை விட தாய் நாடு
பெரிது-என்று போனாய் அம்மா
எம்மை விட்டு பிரிந்தாலும்
எம் நெஞ்சை விட்டு நீங்காத
நினைவோடு வாழுவோம்
தங்கத் தீவில் விளைந்த-முத்தே

தகவல்:
குடும்பத்தினர்

(6371)

# இந்தியா- பாகிஸ்தான் இடையே அணுகுண்டு தொடர்பான பேச்சுவார்த்தை

இந்தியா-பாகிஸ்தான் இடையே அணுகுண்டு தொடர்பான பேச்சுவார்த்தை அடுத்த மாதம் ஐந்தாம், ஆறாம் திகதிகளில் நடக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளும் அணுகுண்டுகள் வைத்திருக்கின்றன. இருநாடுகள் இடையே அணுகுண்டு தொடர்பான நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகள் பற்றிய பேச்சுவார்த்தை கடந்த டிசம்பர் மாதம் இஸ்லாமாபாத்தில் நடந்தது.

அதைத் தொடர்ந்து மீண்டும் இரு நாடுகள் இடையேயான நிபுணர்கள் குழு பேச்சுவார்த்தை அடுத்தமாதம் ஐந்தாம், ஆறாம் திகதிகளில் டில்லியில் நடக்கிறது. பாகிஸ்தான் தரப்பில் வெளியுறவு செயலாளர் ஹைதர் தலைமையிலான குழு கலந்து கொள்ளும். இந்தியா சார்பில் வெளியுறவு செயலாளர் தலைமையிலான குழு பங்கேற்கும்.கடந்த முறை நடந்த பேச்சுவார்த்தைக்குப் பின் எடுக்கப்பட்டு உள்ள நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி இந்தப் பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கப்படும்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து மரபு வழியிலான நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகள் பற்றி இரு நாட்டுக் குழுவும் டில்லியில் அடுத்தமாதம் எட்டாம்திகதி சந்தித்துப்பேசும். அணுகுண்டு பிரச்சினை தொடர்பான ஆபத்துக்களைக் குறைக்கவும் இதில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் தவறான கருத்துக்களைப் போக்கவும் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது எனத் தெரிகிறது.



இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்கச் சுற்றுப்பயணத்தைத் தொடங்கும் முன் அவரது இல்லத்தில் சோனியா அவரை வழியனுப்பி வைத்த காட்சி. படத்தில் மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, அர்ஜுன்சிங் உள்ளனர்.

# ஆர்.எஸ்.எஸ் ஆதரிக்காவிட்டால் பா.ஜ.அழிந்துவிடும் என்கிறார் உமாபாரதி

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் ஆதரவு இல்லாவிட்டால் பா.ஜ. அழிந்துவிடும் என்று உமாபாரதி எச்சரித்தார்.

கடந்த மக்களவைத் தேர்தலின் போது ஆர்.எஸ்.எஸ். போன்ற சங்பரிவார் அமைப்புக்களின் ஆதரவோடுதான் பா.ஜ.மத்தியில் ஆட்சிக்கு வந்தது. சமீபத்தில் பாகிஸ்தான் பயணம் மேற்கொண்ட பா.ஜ. தலைவர் அத்வானி பாகிஸ்தான் நிறுவனர் ஜின்னாவை மதசார்பற்ற தலைவர் என்று புகழ்ந்தார்.

ஆயிரக்கணக்கான இந்துக்கள் படுகொலைக்குக் காரணமான ஜின்னாவை எப்படி மதசார்பற்றவர் என்று அத்வானி அழைக்கலாம். அத்வானி இந்துக்களின் துரோகி ஆகிவிட்டார். அவர் ஜின்னா பற்றி கூறிய கருத்தை வாபஸ் பெறவேண்டும் அல்லது தலைவர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். கூறியது.

பா.ஜ. தலைவர் பதவியை இராஜினாமாச் செய்த அத்வானி பிறகு கட்சியின் நிர்ப்பந்தம் காரணமாக இராஜினாமாவை வாபஸ்பெற்றார். அத்வானி இராஜினாமாச செய்யமறுத்தால் பா.ஜ.வுடன் உறவை துண்டித்துக்கொள்ளும் முடிவுக்கு ஆர்.எஸ்.எஸ் வந்துள்ளது.இந்த நிலையில் பா.ஜ.பெண்கள் தலைவியும், மத்திய பிரதேச முன்னாள் முதல்வருமான உமாபாரதி டில்லியில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது;

ஆர்.எஸ்.எஸ்சுடன் உறவைத் துண்டித்துக்கொண்டால் பா.ஜ. உயிர்வாழ முடியாது. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தேசிய கொள்கைதான் பா.ஜ.வுக்கு அடித்தளம்.ஆர்.எஸ்.எஸ் இயக்கத்திடம் இருந்து விலகிச் சென்றால் பா.ஜ.அழிந்துவிடும். ஆர்.எஸ்.எஸ் இல்லாமல் பா.ஜ.பூஜ்ஜியம்தான்.


நான் ஆர்.எஸ்.எஸ்.சில் உறுப்பினர் அல்ல. ஆனால் அதன் கொள்கையைப் பாராட்டுபவர், பெரிதும் மதிப்பவர் என்றார் உமாபாரதி.

# ஆக்கபூர்வ உறவை மேம்படுத்துவது பற்றி புஷ்சுடன் பேசுவேன் என்கிறார் மன்மோகன்சிங்

ஆக்கபூர்வ உறவை மேம்படுத்துவது பற்றி அதிபர் புஷ்சுடன் பேச்சு நடத்துவேன் என அமெரிக்கா புறப்படு முன் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மூன்று நாள் பயணமாக நேற்று முன்தினம் அமெரிக்கா புறப்பட்டார்.

அப்போது மன்மோகன்சிங் நிருபர்களிடம் கூறியதாவது, இந்தியாவும், அமெரிக்காவும் உலகின் மிகப்பெரிய சனநாயக நாடுகள். அமெரிக்காவுடனான இராஜதந்திர நட்புறவை வலுப்படுத்தும் விஷயத்துக்கு இந்தியா அதிக முக்கியத்துவம் அளிக்கும் இந்திய-அமெரிக்க பொருளாதாரத்தை மேம்படுத்துவது, சனநாயகத்தை நிலைநாட்டுவது எயிட்ஸ் ஒழிப்பு, விவசாயக்கல்வி மற்றும் ஆராய்ச்சி, அறிவியல் தொழில் நுட்பத்துறையில் இருதரப்பு உறவை மேம்படுத்துவது, விண்வெளி விஞ்ஞான ஒத்துழைப்பு, அக்கபூர்வமான அணுசக்திதுறைக்கான ஒப்புதல் ஆகியவை குறித்தும் புஷ்சுடன் பேச்சு நடத்துவேன்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் நான் தங்கியிருக்கும்போது அமெரிக்க துணை அதிபர் டிக் சென்னி மற்றும் அமெரிக்க செனட் சபை மூத்த உறுப்பினர்களுடன் பேச்சு நடத்துவேன். அமெரிக்காவுடன் நட்புமற்றும் ஆக்கபூர்வமான உறவை உருவாக்குவதே எனது பயணத்தின் நோக்கம். எனது அமெரிக்கப் பயணம் இந்தியாவின் மேம்பாடு, பாதுகாப்பு, வெளிநாட்டுக்கொள்கை நலன்களுக்கு உதவிகரமாக அமையும் என்றார்.



காஷ்மீரில் அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் பயணிகள் மீது தீவிரவாதிகள்தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக அமர்நாத் யாத்திரிகள் வரும்பாதையில் இந்திய இராணுவ வீரர்கள் காவல்புரிகின்றனர்.

# கார் ஓட்டுனரை கொன்று விட்டு 20 இலட்சம் ரூபா கொள்ளை



கொள்ளை இடம் பெற்ற காரும் இறந்த நிலையில் ஓட்டுனரும்

தமிழகத்தில் ஆரணி அருகே உந்துருளியில் வந்த முகமூடி கொள்ளையர்கள் கார் ஓட்டுனரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்து காரில் இருந்த வங்கி அதிகாரியிடம் இருந்து 20 இலட்சம் ரூபாயை கொள்ளை அடித்துச் சென்று விட்டனர்.

கடந்த புதன்கிழமை பட்டப்பகலில் நடந்த இந்த பயங்கர சம்பவம் குறித்து பொலிஸ் தரப்பில கூறப்படுவதாவது;

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்துள்ள தச்சூர் கிராமத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் பண அலுவலர் நேற்று முன்தினம் காலை ஆரணி வங்கிக்குச்சென்று அங்கிருந்து ரூ.20 இலட்சத்தை ஒரு இரும்புப் பெட்டியில் எடுத்துக்கொண்டு வாடகைக் காரில் தச்சூருக்கு வந்து கொண்டு இருந்தார். கார் ஆரணி-தேவிகாபுரம் வீதியில் சென்று கொண்டிருக்கையில் அப்போது கறுப்புநிற "ஹீரோ ஹோண்டா" உந்துருளியில் இரண்டு வாலிபர்கள் காரை பின் தொடர்ந்து சென்று காரை நிறுத்தி கார் ஓட்டுநரை சுட்டுக்கொன்று விட்டு 20 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர் என தெரிவித்தனர்.

# குற்றவியல் நடைமுறைச்சட்டதிருத்தங்கள் நடைமுறைக்கு வராது என இந்.அரசு அறிவிப்பு


இந்திய மத்திய அரசினால் அண்மையில் கொண்டுவரப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டதிருத்தங்கள் அமுலுக்கு வராது என்று மத்திய அரசு அதிகார பூர்வமாக அறிவித்தது. இதற்கான முடிவு மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

குற்றவியல் நடைமுறைச்சட்டத்தில் மத்தியரசு சில திருத்தங்களை செய்திருந்தது. இந்தத்திருத்தங்கள் பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கும் என்று கூறி வழக்கறிஞர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் தமிழகம் முழுவதும் உள்ள நீதிமன்றங்களைப் புறக்கணித்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் தமிழகத்தில் ஒருவாரமாக நீதிமன்றப்பணிகள் அடியோடு ஸ்தம்பித்தன. இதனையடுத்து தி.மு.க தலைவர் கருணாநிதி கடந்த எட்டாம் திகதி பிரதமர் மன்மோகன்சிங், மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல்,சட்டத்துறை அமைச்சர் பரத்வாஜ் ஆகியோருக்கு கடிதம் அனுப்பினார். அதில் பொதுமக்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சில திருத்தங்களை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், போராடும் வழக்கறிஞர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான முடிவு காணவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அவரது கடிதத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் அனுப்பிய பதில் கடிதத்தில் வழக்கறிஞர்களுடன் இது குறித்து விவாதிக்க மத்தியரசு தயாராக இருக்கிறது. பொதுமக்களுக்கு நலன் விளைவிக்காத எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் செய்வதற்கு இந்த அரசு விரும்பாது என்று தெரிவித்திருக்கிறார்.

# அத்வானியை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் வருகிற 28 ஆம் திகதி ஆஜராகுமாறு பாரதிய ஜனதாத்தலைவர் அத்வானிக்கு ரேபரேலி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் இருந்த பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பான வழக்கை ரேபரேலியில் உள்ள சி.பி.ஐ தனி நீதிமன்றம் விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் இருந்து பாரதிய ஜனதாத்தலைவர் அத்வானியை விடுவித்ததை எதிர்த்து அலகாபாத் உயர்நீதிமன்றின் லக்னோ கிளையில் வழக்குத் தொடரப்பட்டது.

அந்த வழக்கை விசாரித்த லக்னோ கிளை அத்வானியை விடுவிக்கப்பட்டது செல்லாது என்றும் அவர் மீது தொடர்ந்து விசாரணை நடத்தவேண்டும் என்றும் கடந்த ஆறாம் திகதி தீர்ப்புக் கூறியது. இந்தநிலையில்பாபர் மசூதி இடிப்பு வழக்கு ரேபரேலி நீதிமன்றில் வரும் 28 ஆம்திகதி மீண்டும் விசாரணைக்கு வருகிறது. அன்றைய தினம் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி, அசோக்கிங்கால் உள்ளிட்ட ஏழு பேரும் தமது வழக்கறிஞர்கள் மூலமும் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.அந்த மனுக்களை நேற்று முன்தினம்தள்ளுபடி செய்த நீதிபதி வி.கே.சிங் வருகிற 28 ஆம் திகதி பாரதிய ஜனதா தலைவர் அத்வானியையும் மற்ற ஏழு பேரையும் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.



இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் சிங்கப்பூர், மலேசியா நாட்டு கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்குபற்றவிருக்கும் இந்தியப் போர் விமானங்கள் அந்தமான்-நிக்கோபார் தலைநகர் போர்ட்பிளேயறில் தரித்து நிற்பதை முதலாவது படத்திலும் மேற்படி பயிற்சியில் ஈடுபடவிருக்கும் இந்தியாவின் ஒரே ஒரு விமானம் தாங்கிப் போர்க் கப்பல் போர்ட்பிளேயர் துறைமுகத்தில் தரித்து நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



கிழக்கு ஜெர்மனியில் உள்ள எப்பர்ட் நகரில் 23 வயதிற்குட்பட்டோருக்கான ஐரோப்பிய தடகள போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் ஆண்களுக்கான டெகத்லான் ஈட்டி எறிதல் பரிவில்,ரஷ்யாவை சேர்ந்த அலெக்சி ரோஷ் டோவ் ஈட்டி எறிகிறார்.மொத்தம் உள்ள பத்து போட்டிகளில் இவர் ஒன்பதில் முன்னிலை வகிக்கிறார்.

# ஆஷஸ் தொடரில் சாதிக்க வேண்டுமெனில் உறுதியான கவனம் எடுக்க வேண்டும்




வோகன்

வரும் வியாழனன்று ஆரம்பமாகும் ஆஷஸ் கிண்ணத்துக்கான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியாவை வெல்ல வேண்டுமாயின் உறுதியான கவனம் எடுக்கவேண்டுமென இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

முதலாவது போட்டியில் தனது வீரர்கள் வேகமும் விவேகமும் கொண்டு செயற்படுவது முக்கியம் எனக் ...ுள்ள அவர் முதலாவது போட்டியை வென்றால் அது நல்ல ஆரம்பமாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கும் போது; ஒன்பது முறை முயன்றும் கிண்ணத்தைக்கைப்பற்ற முடியாது போயிருப்பினும் தனது வீரர்கள் தற்போது ஆரம்பிக்கும் பணியை கைவிடக்கூடாது எனத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஆடி குறைந்த அனுபவம்பெற்ற இயன்பெல், பீற்றர் சன், அன்றூ பிளின்டொப் ,ஜெரைன் ஜோன்ஸ் இந்தப் போட்டியில் திறமையை வெளிப் படுத்துவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



2008 ஒலிம்பிக் போட்டிகளுக்காக கண்கவர் மைதானங்களை சீனா உருவாக்கி வருகிறது. படத்தில் நீங்கள் பார்ப்பது கிழக்கு சீனாவில் உள்ள நன்ஜிங்கில் நவீன வசதிகளுடன் தயாரிக்கப்பட்டஒலிம்பிக் மைதானம். இங்கு ஜிம்னாஸ்டிக்ஸ், டென்னிஸ் உட்பட பல விளையாட்டுகள் நடத்தப்படவுள்ளது.

# முக்கோண கிரிக்கெட் போட்டிக்கு முன்னர் இலங்கையில் பயிற்சி ஆட்டத்தில் இந்தியா



மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டிக்கு முன்னதாக இந்திய அணி, இலங்கையில் இரண்டு பயிற்சி ஆட்டத்தில் ஆடும் என்று இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே. நாயர் கூறியுள்ளார்.

இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் பயணம் செய்து ஆடியபோது குறிப்பிட்ட நேரத்தில் பந்து வீசாமல் தாமதப்படுத்தியதாக கூறி இந்திய அணித்தலைவர் கங்குலிக்கு ஆறு ஒருநாள் போட்டியில் ஆட தடை விதிக்கப்பட்டது.

கங்குலிக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து தற்போது விசாரணை நடந்து வருகிறது.அவருக்கு விதிக்கப்பட்ட தடை விலக்கப்படுமா? என்பது குறித்து வரும் 22 ஆம் திகதி தெரியும்.

இதற்கிடையில் இலங்கை பயணத்துக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்படுகிறது. எனவே கங்குலி அணியில் சேர்க்கப்படுவாரா? மாட்டாரா? என்பது குழப்பமாகவுள்ளது.

பின்னர் இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே. நாயர் கூறியதாவது;

இந்திய தேர்வுக்குழுவினருக்கு கங்குலியை அணியில் சேர்ப்பது தொடர்பாக உத்தரவு எதுவும் போடமாட்டோம். மாறாக அவர்களுக்கு சிறப்பு அறிவுரைகள் வழங்கவுள்ளோம்.

மேலும் இலங்கை பயணத்தின் போது மூன்று நாடுகள் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக இரண்டு பயிற்சி ஆட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று அந்நாட்டு கிரிக்கெட் சபையிடம் கேட்டிருந்தோம். இதற்கு இலங்கை கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்து விட்டது. அதன் படி முதல் பயிற்சி ஆட்டம் வரும் 25 ஆம் திகதியும்.இரண்டாவது மற்றும் கடைசி பயிற்சி ஆட்டம் 27 ஆம் திகதியும் நடைபெறும்.


# பயிற்சிப் போட்டியில் திறமையை நிரூபித்தாலே ஆஷஸ் தொடரில் கிளெஸ்பிக்கு இடம்



அவுஸ்திரேலியாவின் வேகக் கூட்டணியில் உள்ள ஜேசன் கிளெஸ்பிக்கு இது கஷ்ரகாலம். பயிற்சிப் போட்டியில் திறமையை நிரூபித்தால் மட்டுமே ஆஷஸ் தொடரில் வாய்ப்பு கிடைக்கும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.


அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் கிளெஸ்பி. டெஸ்ட், ஒருநாள் இரண்டிலும் மெக்ராத்துடன் இணைந்து பந்துவீச்சை தொடக்குபவர் ஆனால் சமீபகாலமாக இவரது வேகத்திற்கு விக்கெட்டுகள் கிடைப்பதில்லை. கடைசியாக இங்கிலாந்தில் நடந்த முத்தரப்பு மற்றும் நட்வெஸ்ட் சாலஞ்ச் ஒருநாள் தொடரில் இவரது பந்துவீச்சை விளாசி விட்டனர் இங்கிலாந்து வீரர்கள். இந்நிலையில் அபாரமாக பந்து வீசிய பிரட்லீ இவரது இடத்தை பிடித்துவிட்டார். இதனால் வரும் 21 தொடங்கும் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு குறைந்துள்ளது. இத் தொடருக்கு முன்னதாக அவுஸ்திரேலிய அணி, லீசெஸ்டர்ஷயர் அணிக்கு எதிராக மூன்று நாள் பயிற்சிப் போட்டியில் விளையாடவுள்ளது. இது தான் கிளெஸ்பிக்கு கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு. இதில் சிறப்பாக விக்கெட்டுகள் குவித்தால் மட்டுமே அணியில் இடம் பெறமுடியும். இப்போட்டியில் மெக்ராத்,வோர்ன் போன்ற வீரர்கள் இடம் பெறவில்லை.



தெற்கு ஜப்பானில் உள்ள சென்டாய் நகரில் நடந்த பெண்களுக்கான சர்வதேச கரப்பந்து முதல்சுற்று போட்டியில் சீனா, 3-1 என்ற கணக்கில் ஹாலந்தை வீழ்த்தியது. தன்னை நோக்கி வந்த பந்தை திருப்ப அனுப்ப முயல்கிறார் சீன வீராங்கனை லியனான்.

# கோலூன்றி பாய்தலில் ரஷ்ய வீராங்கனை மீண்டும் சாதனை



ரஷ்யாவின் கோலூன்றிப் பாயும் வீராங்கனையான யெலினா இன்பயேவா பெண்களுக்கான போட்டியில் மீண்டும் ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

11 நாட்களுக்கு முன்பு அவர் கோலூன்றிப் (உயரம்) பாய்தலில் 4.93 மீற்றர் பாய்ந்தார். நேற்று முன்தினம் மெட்றிட்டில் நடைபெற்ற போட்டியில் அதனையும் முறியடித்து 4.95 மீற்றர் பாய்ந்துள்ளார்.

ஒலிம்பிக் சம்பியனான அவர் 15 சர்வதேச சாதனை நிகழ்த்தியுள்ள நிலையில் இன்னும் சாதனை நிகழ்த்த எதிர்பார்திருப்பதாக தெரிவிக்கிறார். அதனை நிறைவேற்ற தனது பயிற்சியாளர் யெவ்கினிரொபிமோ உதவுவர் என்றார்.

# சங்கிலி குண்டெறிதலில் ரஷ்ய வீராங்கனை சாதனை

விளாடிமிர் குட்ஸ் நினைவு தடகள போட்டி மொஸ்கோவிலுள்ள லுஸ்கினி ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் பிரிவு சங்கிலி குண்டு எறிதலில் ரஷ்ய வீராங்கனை தாத்யானா விசென்கோ புதிய உலக சாதனை படைத்துள்ளார். அவர் 77.06 மீற்றர்தூரம் சங்கிலி குண்டை வீசி இந்த ...னை படைத்துள்ளார். இதற்கு முன்பு ரொமேனியா ...னை 1999இல் 76.07 மீற்றர் தூரம் வீசி இருந் ...னயாக இருந்துவந்தது.

# இந்தியகிரிக்கெட் அணியுடன் அவுஸ்திரேலியா புதிய ஒப்பந்தம்



இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் இடையே புதிய ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் பொப் மெர்ரிமேன் கூறினார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபைத் தலைவர் பொப்மெர்ரிமேன் நிருபர்களுக்குதெரிவிக்கையில்; இந்திய-அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபைகளுக்கு இடையே புதிய ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. அதன்படி ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்குள்ளும் ஒரு முறை இந்திய அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து நான்கு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடும். அதேபோல் அவுஸ்திரேலிய அணியும் இந்த நான்கு ஆண்டுக்குள் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து நான்கு டெஸ்ட் போட்டிகளில் ஆட திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு நாள் போட்டியை பொறுத்தவரையில் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குள்ளும் இரு அணிகளும் முறையே தலா ஒருமுறை அவுஸ்திரேலியா, இந்தியாவுக்கு இடையே மாறி மாறி சுற்றுப்பயணம் செய்து ஐந்து ஒரு நாள் போட்டிகளில் ஆட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு ஐ.சி.சி ஒப்புதல் அளித்தால் வரும் ஒக்ரோபர் மாதம் ஒப்பந்தம் கையெழுத்திடப்படும். 2007 உலகக்கோப்பையைக் கைப்பற்றுவது குறித்து நாங்கள் தற்போது சிந்திக்கவில்லை. மாறாக அடுத்த டெஸ்ட்டில் வெற்றி பெறுவதிலேயே குறிக்கோளுடன் இருக்கிறோம். எந்த ஒரு வீரரும் சிறப்பாக ஆடவில்லை என்றால் அவர் அணியிலிருந்து நீக்கப்படுவார் என்று பொப்மெர்ரிமேன் கூறினார்.

# பருத்தித்துறை கால்பந்து லீக்நடாத்தும் விலகல் முறையிலான கால்பந்து போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திவரும் விலகல் முறையிலான ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. கடந்த வெள்ளியன்று நடைபெற்ற போட்டியில் இமையாளன் மத்திய விளையாட்டுக்கழகமும், சுடர்ஒளி விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்கு முன்னேறியுள்ளன.


நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும், சுடர்ஒளி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இளந்தென்றல் அணி ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்தது. தொடர்ந்து ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் சுடர்ஒளி விளையாட்டுக்கழக வீரர் ஒரு கோலை அடித்ததும் ஆட்டம் மிகவும் விறுவிறுப்படையத் தொடங்கியது.முதல்பாதி ஆட்டம்1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைய இரண்டாவது பாதியாட்டம் தொடங்கியது. ஆட்டம் சுறுசுறுப்பாக இருந்தபோது சுடர்ஒளி அணிவீரர் மேலும் ஒரு கோலை அடித்து வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டார்.

மாலை 4.30 மணிக்கு தொடங்கிய மற்றைய போட்டியில் கரணவாய் கொலின்ஸ் அணியும்,இமையாளன் மத்திய விளையாட்டுக்கழகமும் போட்டியிட்டன.

இந்த ஆட்டம் ஆரம்பத்தில் விறுவிறுப்பாக இல்லாத போதிலும் ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் இருந்து ஆட்டம் சூடுபிடிக்க தொடங்கியது. இரு அணி வீரர்களும் கோல்களைப் பெறுவதற்கு பலசந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தாததால் கோல் பெறும் வாய்ப்பை இழந்தனர். இறுதியில் 1-1 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவடைய வெற்றி தோல்வியை 'பெனால்டி' மூலம் தீர்மானிப்பதென முடிவு செய்யப்பட்டது.இதில் இமையாளன் விளை யாட்டுக் கழகம் கொலின்ஸ் அணியை 4-3 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.(கீ)

## சிந்தனைக்கு



எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர்; எமது இனத்தின் ஆன்மா.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-07-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com


## இந்த அவசரம் ஏன்?

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சிறிலங்கா அரசின் சமாதானச்செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால தற்பொழுது வலியுறுத்தியுள்ளமை ஏன்? எதற்காக?

இவ்வாறு கேள்விகள் எழுப்புவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சிறிலங்கா அரசாங்கம் பெரும் இழுபறியின் பின் கையெழுத்திட்ட சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவப்பொதுக்கட்டமைப்பின் செயற்பாடு சிறிலங்கா உயர் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டநிலையில் சமாதானப் பேச்சுவார்தைகளினால் ஏற்படப் போகும் இலாபம் என்ன? என்பதைக் குறித்து எழும் சந்தேகங்களே மேற்படி கேள்விகளைக் கேட்கவைத்துள்ளது.

சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவக் கட்டமைப்பு விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட திட்டமல்ல. சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பால் முன்வைக்கப்பட்டது. நோர்வேத் தரப்பின் பகீரதப் பிரயத்தனத்தாலும் சர்வதேச நாடுகளின் வற்புறுத்தலாலும், சிறிலங்கா அரசு இதில் கையொப்பமிட்டது. இக்கட்டமைப்பு இன்று நீதிமன்றத் தீர்ப்பால் இயங்கமுடியாது முடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக விடுதலைப்புலிகள் வழங்கிய ஒத்துழைப்பும் மட்டுமல்ல-நோர்வே அரசும், சர்வதேச நாடுகளும் எடுத்த முயற்சிகளும் செலவிட்ட நேரமும் வீண் விரையமாகியுள்ளன. அதாவது சுமார் ஆறு மாத காலமாக பலர் மேற்கொண்ட முயற்சிகளை நீதிமன்றத் தீர்ப்பு அர்த்தமற்றதாக்கியுள்ளது.

இதேவேளை நீதிமன்றத்தின் இத் தீர்ப்பானது சிறிலங்கா ஆட்சியாளர்களுடன் இனப்பிரச்சினை தொடர்பாகவோ அன்றி வேறு விடயம் தொடர்பாகவோ தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்துவதென்பது அர்த்தமற்றதொன்று என்பதை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது காலத்தையும், பொருளையும் செலவுசெய்து மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சியும் வெற்றி பெற்று அமுலாக்கம் பெறுவதற்கான சாத்தியப்பாடு இல்லை.

அதாவது எத்தனை சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும், எந்த நாட்டில் நடத்தினாலும் சிறிலங்கா அரசியல்வாதிகள் உறுதியுடன் செயற்பட்டாலே ஒழிய இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு விடயத்திலோ அன்றி தமிழர் தொடர்பான வேறு சுனாமி போன்ற விடயத்திலோ சிறிலங்கா அரசு தீர்வொன்றைக் காணப் போவதில்லை.

ஏனெனில், சிறிலங்கா அரசியல்யாப்பு ஒற்றையாட்சிமுறையைத் தீவிரமாக வலியுறுத்துவதோடு-ஏனைய இன, மத மக்களுக்கு சம உரிமைகளை வழங்கத்தயாராகவும் இல்லை. ஆகையினால், எத்தகைய பெரிய முயற்சிகளையும் நீதிமன்றத்தின் மூலம் சில நபர்கள் கூடத் தடுத்து நிறுத்திவிடக் கூடிய சூழ்நிலையே உள்ளது.

இந்நிலையினைப் புரியாதவரல்ல சிறிலங்காவின் சமாதானச்செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால. அவ்வாறு இருந்தும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என இவ்வேளையில் கோரிக்கை விடுக்கப்படுவது ஏன்? சமாதானப் பேச்சுவார்த்தைகளினால் தமிழ் மக்களுக்குக் கிட்டப் போகும் இலாபம்தான் என்ன?

பொதுக்கட்டமைப்பு தற்பொழுது சந்தித்துள்ள தோல்வியானது சந்திரிகா அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகத்திற்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இந்நிலையானது அரசியல் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

ஆனால் அரசியல் ரீதியில் சந்திரிகா அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளைப் போக்குவதற்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமானால் அதுஅரசுக்கு பேருதவியாகவே இருக்கும். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தை என்பது அரசிற்குச் சர்வதேச ரீதியில் நற்பெயரையும், உள்நாட்டு அரசியலில் அரசாங்கத்தின் மீதான பெரும் அழுத்தங்களைக் குறைப்பதாகவும் இருக்கும்.

இதே சமயம் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ள அரசாங்கத்திற்கு சமாதானப் பேச்சவார்த்தைகள் ஆரம்பிக்கப்படின் நெருக்கடிகளில் இருந்து மீள பெரிதும் கைகொடுக்கும் ஒன்றாகவே இருக்கும். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுமானால் வெளிநாட்டு நிதி உதவியும் முதலீடும் கிடைக்கப்பெறுவது இலகுவானதாகிவிடும்.

இந்த வகையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் சந்திரிகா அரசாங்கத்தின் தற்போதைய நெருக்கடிகள், தேவைகள் நிறைவு செய்யப்படுவதற்கும், அது தனது ஆயுட்காலத்தை நெருக்கடியின்றி நீடித்துச்செல்லவும் உதவுவதாக இருக்கும். அதாவது அரசியல் பொருளாதார ரீதியில் பலப்படவும் ஆட்சிக்காலத்தை நீடிக்கவும் வாய்ப்புண்டு.

ஆனால். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் தமிழ்மக்களுக்கு கிட்டப்போவது என்ன? ஏமாற்றமும் விரத்தியுமே? மனிதாபிமான பணிக்கான செயற்பாட்டிற்குக் கூடத் தமிழ்த் தரப்புடன் இணைந்து செயற்பட முடியாத சிங்கள தேசம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முன்வருமா? இது கற்பனையில் தவிர,நிஜத்தில் சாத்தியமாகும் என எதிர்பார்த்தால் அது எத்தனை மடமையானதாக இருக்கும்.?

# மகிந்தவை சனாதிபதி வேட்பாளராக்குவது குறித்து மங்கள, மகிந்த, வீரவன்ச இரகசியச் சந்திப்பு

சிறிலங்கா அமைச்சர் மங்கள சமரவீர, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச, றுவான் பெர்டினாண்ட்ஸ் ஆகியோர் கடந்த வாரம் இரகசிய ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியதாக இணையத்தளமொன்று கூறுகின் றது.

தனது இந்தியப் பயணத்திற்கு முன்னதாக தமிழ் வர்த்தகர் ஒருவரின இல்லத்தில் இந்த இரகசிய சந்திப்பை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நடத்தியுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் தன்னை வேட்பாளராக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து இக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ விவாதித்துள்ளார்.

கூட்டத்தில் பேசிய சமரவீர சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறும் நிலையில் பிரதமர் பதவியை அநுரா பண்டாரநாயக்கவுக்குக் கொடுப்பது என்ற வாக்குறுதியின் மூலம் அநுராவை சமாதானப்படுத்தலாம் என யோசனை கூறியுள்ளார்.

சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் சிலவற்றை பிரதமருக்கு மாற்றுகின்ற திருத்தங்களை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ செயற்படுத்தினால் அநுரா பண்டாரநாயக்கவை போட்டியிருந்து வெளியேற்றுவதுடன் அவர் மகிந்த ராஜபக்ஷவையும் ஆதரிக்கக்கூடும் எனவும் மங்கள சமரவீர கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இப்படியான திருத்தத்தை மேற்கொண்டால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவுப்பலம் அரசிலும், ஆட்சியிலும் வலுவிழந்து விடும் என்றும் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

தான் சனாதிபதியாக வெற்றி பெற்றால் அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரும் பிரதமர் பதவியை எதிர்பார்ப்பதாகவும், மகிந்த ராஜபக்ஷ இக் கூட்டத்தில் கூறினார். ஆனால் இதை உடனே நிராகரித்த மங்கள சமரவீர சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் அனைத்து உறுப்பினர்களுமே அதிகாரத்தை மையமாக வைத்துத்தான் செயற்படுவார்கள் என்றும் இது குறித்து நீங்கள் ஒன்றும் அச்சப்பட வேண்டியதில்லை என்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

மங்கள சமரவீரவின் கருத்துக்களை ஆதரித்துப் பேசிய விமல் வீரவன்ச இந்த ஆண்டு இறுதிக்குள் சனாதிபதித் தேர்தலை நடத்தியாக வேண்டும். அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான பிளவு அதிகரித்து வரும் நிலையில் மகிந்த ராஜபக்ஷவை உடனே சனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்றார். அப்படி அறிவிக்கப்பட்டால் நாங்கள் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது குறித்து வெளிப்படையாக அறிவிப்பதோடு அவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடவும் தயாராக இருக்கின்றோம் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். ஆனால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தான் எடுக்கும் முடிவுகளில் நல்லதோ, கெட்டதோ உறுதியாக இருக்க வேண்டும் என்றும் விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

இந்த ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ தனது இந்தியப் பயணத்தைநிறைவு செய்த பிறகு சனாதிபதித் தேர்தல் பரப்புரை பயணத்தை தொடங்கலாம் என்று கூறி இந்த இரகசிய ஆலோசனைக் கூட்டத்தை நிறைவு செய்துள்ளார்.

# சனாதிபதியின் 3ஆவது பதவி ஏற்புக்கான வர்த்தமானி அறிவிப்பு எதுவும் இல்லை

### -அரச அச்சகக் கூட்டுத்தாபன அதிகாரி தெரிவிப்பு

1999 ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி புதன்கிழமை இலக்கம் 1111/12 அரச வர்த்த மானியில் சந்திரிகா குமாரதுங்க நாட்டின் சனாதிபதியாக பதவி ஏற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவில்லை என அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி வர்த்த மானி வெளியீட்டின் படி 1981 இலக்கம் 15 கோவையின் படி 646 யாப்பின் சட்ட அதிகாரங்களுக்கு இணங்க சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அப்போதைய தேர்தல் ஆணையாளர் டி.எம்.பி.திசநாயக்க தெரிவித்துள்ளார் என வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிசார்— ஈ.பி.டி.பி பருத்தித்துறையில் அடிதடி

யாழ்.வடமராட்சி மந்திகையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பியின் முகாமில் ஈ.பி.டி.பி யினருக்கும் சிறிலங்கா பொலிசாருக்குமிடையில் போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பில் பிணக்கு ஏற்பட்டு அடிதடியில் முடிவடைந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஈ.பி.டி.பி யினர் பருத்தித்துறைக்குச் சென்றுவர பொலிசாரிடம் பாதுகாப்பு வழங்குமாறு கோரியுள்ளனர். அதற்கு பொலிசார் மறுப்புத் தெரிவித்ததையடுத்து ஈ.பி.டி.பி யினர் பொலிசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். வாக்குவாதம் உச்ச நிலையை அடைந்து அது கைகலப்பாக மாறியுள்ளது. இரு பகுதியினருக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஆத்திரமடைந்த பொலிசார் ஈ.பி.டி.பி யினரை முகாமில் இருந்து இழுத்துச்சென்று பருத்தித்துறை சிறையில் அடைந்துள்ளனர். பின்னர் இந்த ஈ.பி.டி.பி யினர் அடுத்த நாள் காலையிலேயே பருத்தித்துறை ஈ.பி.டி.பி முகாமிற்கு திரும்பியதாக கூறப்படுகிறது.

# பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவாக ஹட்டனில் நேற்று ஆர்ப்பாட்டம்

### மலையக இளைஞர் முன்னணி ஏற்பாடு

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும் மீண்டும் யுத்தம் ஒன்றுக்கு எதிர்ப்பு வெளியிட்டும் நேற்று ஹட்டன் நகரில் ஆர்ப்பட்டம் ஒன்று நடாத்தப்பட்டது ஹட்டன் பேருந்து மையத்திற்கு முன்னால் நடைபெற்ற இந்தப்போராட்டத்தை மலையக இளைஞர் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது. பலத்த மழையின் மத்தியிலும் இதில் சுமார் 3500 பேர் வரை பங்கேற்றதாக தெரியவருகின்றது. இந்த நிலையில் நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மலையக மக்கள் முன்னணியின் தலைவர்களான எம் சிவலிங்கம், எஸ் அருள் சாமி மற்றும் திகாம்பரம் ஆகியோர் சமாதானத்தை வலியுறுத்தி உரை யாற்றினர்.

முன்னதாக இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முன்னர் பேரணி ஒன்றுக்கு பொலிசார் அனுமதி வழங்கியிருந்த போதும் பின்னர் அதனை மறுத்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# யாழ்.பொது அமைப்புக்களுக்கான ஒன்று கூடல் இன்று

(யாழ்ப்பாணம்)

தற்கால அரசியல் சூழல் நிலைகள் தொடர்பான கலந்துரையாடலுக் கான அழைப்பொன்றை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் பொது அமைப்புக்களுக்கு விடுத்துள் ளது.

மேற்படி பொது அமைப்புக்களுக் கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்.கைலாச பதி அரங்கில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலானது தற்கால நெருக்கடியான அரசியல் சூழ்நிலை தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே பொது அமைப்புக்களுக்கான அழைப்பினை மேற்படி ஒன்றியம் விடுத்துள்ளது.

### மினுவாங் கொடையில் துப்பாக்கிச் சூடு சிங்களவர் ஒருவர் பலி

மினுவாங்கொட மிரிஸ்வத்த பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிங்களவர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். இப் பிரதேசத்தில் நெடுங்காலமாக நிலவி வரும் குழுச் சண்டையே இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்கு காரணம் என பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# வடக்குக் கிழக்குக் கல்விமேம்பாட்டு நிறுவகம் நேற்று கிளிநொச்சியில் திறந்துவைப்பு

தமிழ்மொழி மூலக்கல்வியின் அடித்தளத்தையே தகர்த்தழிக்கும் நோக்கோடு பல்வேறு வழிகளில் பல்வேறு மட்டங்களில் பல்வேறு நடவடிக்களை சிறிலங்கா அரசு மேற்கொண்டுவருகிறது.

இவ்வாறு வடக்குக் கிழக்குக் கல்வி நிறுவகத்திறப்பு விழாவில் உரையாற்றும்போது தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்.;






ஆரம்பகாலம் தொடக்கம் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததென சொல்லப்பட்ட காலம் வரை தமிழர்கள் கல்வியிலே உயர்ந்தநிலையில் இருந்திருக்கின்றோம். வேலைவாய்ப்புக்களை நிறைவாக பெற்றிருந்திருக்கின்றோம்.

ஆனால் தற்போது அந்த நிலைகள் எல்லாம் மாறி இன்றைக்கு நாங்கள் எங்கு இருக்கின்றோம் என சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது.

1970 ஆம் ஆண்டிலே இனவாதத் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களது பல்கலைக்கழக நுழைவுக்கு உலை வைத்த சிறிலங்கா ஆட்சியாளர்கள் அதனோடு நின்று விடாது தமிழ்மொழியிலே கல்வியின் அடித்தளத்தையே தகர்த்தழிக்கும் நோக்கோடு பல்வேறு வழிகளில் பல்வேறு மட்டங்களில் பல்வேறு அழிவு நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றனர். கல்விப்புலத்தில் எல்லா மட்டங்களிலும் தமிழ்மொழிமூல ஆளணிப் பற்றாக்குறை கடுமையாக நிலவுகின்றது., கல்விச் செயற்பாட்டில் உயர்பீடமாக செயற்படும் மத்திய கல்வி அமைச்சில் தமிழ்மொழிமூல ஆளணிப்பற்றாக்குறை என்பதை விடஆளணி இல்லைஎன்று கூறக்கூடிய நிலையே இருந்து வருகின்றது. தமிழ்மொழிமூல கல்வியிலே பல்வேறு மட்டங்களிலும் செயற்பட்டு வரும் கல்வி அலுவலர்கள் , பள்ளிமுதல்வர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் போன்ற அனைத்து ஆளணிகளுக்குமான பணியமர்த்தங்களை நிறுத்தியும் கட்டுப்படுத்தியும் கற்றல், கற்பித்தலுக்கு தேவையான உபகரணங்கள்,பாடநூல்கள், பாடத்திட்டங்கள், ஆசிரியர் கைநூல்கள் போன்றவற்றை உரிய காலத்தில் வழங்காமலும், மாணவர்கள் பௌதீக வளப் பங்கீட்டில் திட்டமிட்ட புறக்கணிப்புக்களை மேற்கொண்டும் தமிழ்ப்பகுதி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள், தேசியகல்வியியல் கல்லூரிகள் போன்றவற்றுக்கான ஆளணி, பௌதீகவள பற்றாக்குறைகளை பாராமுகமாக விட்டும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை மழுங்கடித்தும் விடுகின்ற நிலை தொடர்கிறது எனத் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு கல்வி மேம்பாட்டு நிறுவகம் நேற்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைவளாகத்தில் திறந்து வை கப்பட்டது.

வட கிழக்கின் கல்வி நிலை, அதன் வளர்ச்சி, வீழ்ச்சி, கல்வி நிறுவனங்கள், முகாமைத்துவக் கட்டமைப்பு, பரம்பல், நவீனகல்விச்சிந்தனைகள், பிரதேச, சமூக, அரசியல், பொருளாதார தேவைக்கான கல்விக்கொள்கை, தற்போதைய கொள்கையின் பொருத்தப்பாடு, தொடர்ச்சியான புறக்கணிப்பு, ஏற்ற மாற்றுத்திட்டங்கள், மானிட இருப்பு விழுமியங்களை பேணுதல், சமமான தரமான கல்வி, வாழ்நாள் முழுவதற்குமான கல்வி, கல்வியின் எடுகோள் என்பன பற்றி கடந்த பல வருடங்களாக பேசியும், சிந்தித்தும் தத்தம் மட்டத்தில் முடிந்தளவில் செயற்பட்டு வந்த நிலையில் சிதறிக்கிடக்கும் பொருத்தமான சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் ஒன்று சேர்த்து ஒரே நெறியின் கீழ் வழிப்படுத்தி எமது பிரதேசகல்வியை மீட்டெடுத்து மேம்படுத்தும் நோக்கில் தமிழீழக் கல்விக் கழகமும் மற்றும் வடக்கு கிழக்கு கல்விசார் உயர் அதிகாரிகளும் இணைந்து உருவாக்கிய இந் நிறுவகத்திற்குரிய கட்டடமே நேற்று திறந்து வைக்கப்பட்டது. காலை10 மணியளவில் நடைபெற்ற இந் நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நிறுவகத்தின் பெயர்ப்பலகையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் மோகனதாஸ் திரைநீக்கம் செய்துவைக்க, செயலகத்தினை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி ஆளுநர் தியாகலிங்கம் நாடாவை வெட்டித்திறந்துவைத்தார்.

அடுத்து நடைபெற்ற அரங்க நிகழ்வில் ஜி.ரி.இசற் நிறுவன பணிப்பாளர் டிவகலாலா இந் நிறுவகத்தின் கொள்கையினை விளக்க, தொடர்ந்து தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் தற்போதைய தமிழர் கல்வியின் நிலைப்பாடுகள் பற்றியும் அரசாங்கம் தொடர்ந்து தமிழர் கல்வியில் காட்டி வரும் புறக்கணிப்புகள் பற்றியும், இவற்றை நிவர்த்திசெய்வதற்கான வழிவகைகள் பற்றியும் இந் நிறுவகத்தின் கொள்கைகளை செயற்படுத்தும் முறைகள் பற்றியும் விளக்கமளித்தார்.

இந் நிகழ்வில் வடக்கு கிழக்குமாகாணங்களில் கடமையாற்றும் கல்விக்கழகப்பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கலாசாலை அதிபர்கள் மற்றும் தமிழீழ கல்விக்கழக துணைப்பொறுப்பாளர், மாவட்ட பொறுப்பாளர்கள் கல்விசார் அதிகாரிகள் எனப் பெரும் மளவானோர் கலந்து கொண்டனர். (ச)

# தமிழ்நாட்டின் மூத்த புகைப்படக் கலைஞர் சுபாசுந்தரம் மாரடைப்பால் காலமானார்



தமிழ்நாட்டின் மூத்த பத்திரிகைப் புகைப்படக்கலைஞர் சுபாசுந்தரம் சென்னையில் நேற்று முன்தினமிரவு மாரடைப்பால் காலமானார்.

40 ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகை மற்றும் புகைப்படத் துறைகளில் அனுபவம் மிக்க சுபாசுந்தரம் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளில் ஒருவராக சித்தரிக்கப்பட்டு சிறப்பு நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டு, பின்னர் இந்தியாவின் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தேசியவாதிகளுடன் பழகிவந்த அவர் பல்வேறு தமிழகத் தலைவர்களுக்கும் நெருங்கியவராக இருந்தார். ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர் அவரது புகைப்படக்கருவி சம்பவ இடத்தில் கிடந்ததைத் தொடர்ந்து அவரிற்கும் இக்கொலையுடன் தொடர்பு இருப்பதாகக் கூறி சிறப்புப் புலனாய்வு குழு அவரைக்கைதுசெய்தது. இதனைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு சன வரியில் சென்னை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் சுபாசுந்தரம் உட்பட 26 பேருக்கு வழக்கில் தூக்குத்தண்டனை விதித்தது. அதனையடுத்து ஓர் ஆண்டிற்குபிறகு சுபாசுந்தரம் உட்பட 19 பேரை விடுதலை செய்தது.

சுபாசுந்தரம் அவர்கள் சாட்சியங்களை கலைக்க முயற்சி செய்தார் என்று அவரிற்கு இரண்டாண்டுசிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் எட்டு ஆண்டுகள் இவர் சிறையில் இருந்ததனால் விடுதலை செய்யப் பட்டிருந்தார். இறக்கும்போது இவருக்கு வயது 65 ஆகும்.

## பொதுக்கட்டமைப்பு...

இன்றைய அரசியல் நிலை தமிழ்த்தேசிய இனத்துக்கே பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த மூன்றரை வருடங்களாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் அரசியல் ரீதியாக நாம் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை. இடைக்கால நிர்வாகம் பொதுக்கட்டமைப்பு எல்லாம் முடக்கப்பட்டுள்ளது. இவற்றை வைத்துப் பார்த்தால் சமாதானப் பேச்சுவார்த்தை மூலமாக தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு ஒருதீர்வு காணப்படலாம் என்ற நம்பிக்கை தகர்ந்து போயிருக்கிறது. அத்தகைய நிலைமையை நாங்கள் விரும்பவில்லை. ஆனாலும் அப்படியான நிலைக்கு எங்களை அரசு தள்ளிவிட்டிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் நாங்கள் சில வேலைகளை முன்னெடுக்க இருக்கிறோம். மக்கள் மத்தியில் சென்று இந்தக் கருமங்கள் சம்பந்தமாக பிரச்சாரம் செய்யஇருக்கிறோம். அதே போல மிகவும் வேதனை தரும் இந்த நிலைப்பாட்டைப் பற்றி சர்வதேச சமூகத்தின் மத்தியில் சென்று அவர்களுக்கும் விளக்க இருக்கிறோம்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்றரை ஆண்டுகள் கடந்தும் அரசு சமாதானத்தை ஊக்குவிக்க எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இதனை நாம் சர்வ தேச நாடுகளுக்கு எடுத்துக்கூறி எங்கள் பிரச்சினைகளை தெளிவு படுத்தவேண்டும். அந்தப் பணியையும் மக்களுக்கு தெளிவு படுத்துகின்ற பணியையும் மேற்கொள்ள உள்ளோம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை கட்டிஎழுப்பும் முகமாகவும் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலும் உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு செயலிழந்து போயுள்ளது. இதனைப் பற்றிப் பேசுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ,தீ)

## மீனவர்களுக்கு...

மக்கள் இராணுவத்தினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் மாலை மூன்று இராணுவத்தினர் சுப்பர்மடம் கடல்தொழிலாளர்கள் சங்க காரியாலத்தின் பின் வளாகத்தில் படகுகள் வைக்கப்பட்டுள்ள இடத்திற்குச் சென்று சுற்றிப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

மீண்டும் நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஆயுத சகிதம் வந்திருந்த எட்டு இராணுவத்தினர் படகுகளை பார்வையிட்ட பின் அவற்றில் இருந்த மூன்று படகுகள் மற்றைய படகுகளிலும் பார்க்க சுற்று அளவில் பெரியதாக இருந்ததால் அப்படகுகள்விடுதலைப் புலிகளுக்கு வந்தவை எனவும் [illegible] உடன் அகற்றவேண்டுமெனவும் கூறியதை அடுத்து அங்கு கூடிநின்ற மக்கள் இராணுவத்தினரின் கருத்தை மறுத்தனர். இப்படகுகள் மீன்பிடிப் படகுகள் என்றும் இவை தமக்கு வந்தவை எனக் கூறி இராணுவத்துடன் வாக்குவாதத் திலீடுபட்டனர்.

பதிலுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் தாம் டோசர் கொண்டு வந்து முழுப்படகுகளையும் அப்புறப் படுத்தப்போவதாக என மிரட்டியுள்ளனர்.

இதனால் சீற்றம் கொண்ட மக்கள் தமது கடும் எதிர்ப்பினை காட்ட சிறிலங்கா இராணு வத்தினர் அவ்விடத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர். (கா)

## மன்னாரில்..

மறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் எம்.பி பாருக் உத்தர விட்டுள்ளார். மன்னார் பள்ளிமுனை வீதியிலுள்ள கோந்தபிட்டி என்ற இடத்தில் வைத்து வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தொடர்புடைய மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளமையால் இவர்களை விளக்கமறியலில் வைக்கவேண்டும் எனவும்கோரிய பொலிசார் பாதுகாப்புக் கருதி அனுராதபுரத்தில் இவர்களை விளக்கமறியலில் வைக்க அனுமதி கேட்டனர். இதற்கு அனுமதி வழங்கிய நீதவான் இவர்களுக்கு உரிய விசேட பாதுகாப்பை வழங்குமாறு அநுராதபுர சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டார். (32)

# திருமலையில் பொதுக்கட்டமைப்பு அலுவலகம் அமைப்பதற்கு ஜே.வி.பி விரும்புகிறதா?

## -பிரதி அமைச்சர் டிலான் பெரேரா கேள்வி

தமிழீழவிடுதலைப்புலிகளினதும், ஜே.வி.பியினதும் செயற்பாடுகள் ஒருமித்திருப்பது குறித்து ஜே.வி.பி பதில் கூற வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. பிரதி அமைச்சர் டிலான் பெரேரா இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார். உயர் நீதி மன்றம் பொதுக்கட்டமைப்பு விடயத் தில் அளித்துள்ள தீர்ப்பின்படி அதன் காரியாலயம் ஒன்றை கிளிநொச்சியில் வைத்திருக்க முடியாது எனில் வழக்கின் மனுதாரரான ஜே.வி.பியின் நோக்கம் நிறைவேறியுள்ளதா? என கேட்கவேண்டியுள்ளது. கிளிநொச்சியில் அலுவலகத்தை அமைக்காவிட்டால் அம்பாறையில், மட்டக்களப்பில் அல்லது யாரும் ஏற்றுக் கொள்ளாத விடுதலைப்புலிகளால் ஈழத்தின் தலைநகராகக் கூறப்படுகின்ற திருகோணமலையில் பொதுக்கட்டமைப்பின் அலுவலகத்தை அமைக்க வேண்டியிருக்கும்.. இதனைஜே.வி.பிஏற்றுக்கொள்கிறதா?அதாவது அந்தக்கட்சி தமிழீழ விடுதலைப்புலிகளின் எண்ணத்தையா பிரதிபலிக்கிறது?என டிலான் பெரேரா கேள்வி எழுப்பினார். (32)

## சுப்பர்மடம்....

ருளியில் வைத்து கொண்டு செல்கையில் எதிரே உந்துருளியில் பயணித்த சுப்பர் மடத்தைச் சேர்ந்த செல்லத்துரை செல்வரத்தினம் (வயது- 52) என்பவர் வெளியிணைப்பு இயந்திரத்தின் (பப்ளர்) வெட்டுக்காயத்திற்கு இலக்கான நிலையில் வடமராட்சி மந்திகை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட இவர் போதனா வைத்தியசாலையில் இரவு 10.00 மணியளவில் சிகிச்சை பயனளிக்காது பலியானார்.

பலியான வயோதிபரின் சடலம் மாலை 6.00 மணியாகிய நிலையிலும் உறவினர்களிடம் ஒப்படைக்கவில்லை. (கா)

## உந்துருளி...

நண்பர் ஒருவரையும் ஏற்றிக் கொண்டு உந்துருளியை மிக வேகமாக ஓட்டிச்சென்றுள்ளார்.

அந்தச்சமயம் உந்துருளி ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகிச்சென்று ஓரமாக நின்றிருந்த மரத்துடன் மோதியது. இதில் உந்துருளியை ஓட்டிச்சென்ற தேவகுமார் என்பவர் பலியானார். பின் இருக்கையில் அமர்ந்து சென்றவர் சிறுகாயங்களுடன்தப்பினார். (33)

## கருத்துப்படங்கள்

**வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப் படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக்கப்படும்.**

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிரதம ஆசிரியர்,**
**ஈழநாதம், கிளிநொச்சி.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.